பிரிவினைத் திட்டம் ஐ. நா. சபை செல்லும்

திராவிடநாடு

மலர் 10. 23—12—51 இதழ் 25.

விலை: அணா மூன்று

1954ல் பொதுமக்கள் வாக்கெடுப்பை

தி. மு. க. நடத்திக் காட்டும்

திராவிடநாடு பிரச்சினை நாளுக்கு நாள் வளர்ந்து வரும் ஒரு விடுதலை முழக்கம். அதனைத் தடுத்து நிறுத்திவிட எவராலும் முடியாது.

இன்று சிலர் திராவிடநாடு கூடாது என்கிறார்கள். அதற்குக் காரணங்களைத் தேடிப் பிடித்து தொல்லை படுகிறார்கள்.

ஆனால், திராவிடநாடு திராவிடருக்கே என்பது திராவிடத்தில் வாழும் மக்களின் ஏகோபித்த குரல். இதனை, எதிர்த்திடுவோருக்கு விளக்கம் தர வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்ததாகும்.

தன் பொறுப்புணர்ந்து, இது வரை தி. மு. க. பணியாற்றி வந்திருக்கிறது. திராவிடத் தனியரசு கோரிக்கைக்குரிய சரித்திர ஆதாரங்கள், பூகோள விளக்கங்கள் முதலியவற்றைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டி வந்திருக்கிறது. மக்கள், அவைகளைக் கேட்டு, இழந்த தம் திருநாட்டை மீண்டும் பெறுவதே தம் வாழ்வின் இலட்சியம் என்பதை உணரத் தொடங்கியுள்ளனர்.

இதனை, எதிர்க்கட்சித் தோழர்களுக்கும், வடவருக்கும், ஏன், அகில உலகத்திற்கும் எடுத்துக் காட்ட தி. மு. க. முடிவு செய்துள்ளது. திராவிடத் தனியரசு பிரச்சினையை முன்வைத்து, பொதுமக்கள் வாக்கெடுப்பு Referendum நடத்தத் தீர்மானித்துள்ளது. இதனை மாநில மாநாட்டில் தலைவர் சி. என். ஏ. குறிப்பிட்டபோது கூடியிருந்த இலட்சக் கணக்கான மக்கள் ஆரவாரம் செய்ததிலிருந்து அவர்கள் எவ்வளவு ஆர்வத்தோடு அதனை வரவேற்கிறார்கள் என்பது தெரிந்தது.

Referendum அகில உலக அரசியல் அமைப்புகளில் அரியதோர் திட்டம்! ஜனநாயக முறைகளிலேயே சிகரம் போன்ற திட்டம்!!

குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை மக்கள் முன்வைத்து, 'வாக்கெடுப்பு நடத்தி, அந்தப் பிரச்சினை பற்றி மக்களின் மனதை அறிந்திட உதவும், ஜனநாயக வழிகளிலேயே தலை சிறந்ததாகும், இந்த வாக்கெடுப்பு முறை!

ஆஸ்திரேலியாவில் இந்த முறை உண்டு. அங்கு, அரசியல் சட்ட திட்டத்தைத் திருத்த வேண்டுமானால், பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்தியே தீரவேண்டும். நினைத்த நேரத்தில், நினைத்தபடி அரசியல் சட்டத்தை வளைத்துக் கொள்ள முடியாது. மக்களின் மனதறிந்து பிறகே மாற்றவோ திருத்தவோ முடியும்.

வட ஆஸ்திரேலியாவில், ஆஸ்திரேலியா காமன்வெல்த்தில் இருப்பதா, கூடாதா என்ற பிரச்சினை எழுந்தபொழுது, மக்களின் மனதை அறிந்தாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உடனே பொதுமக்கள் வாக்கெடுப்பு நடந்தது.

ஐரிஷ் தேசத்தின் புதிய அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டது 1937-ல். அதனை மக்கள் மீது திணிக்கவில்லை. யாரோ சிலர் கூடி சட்டதிட்டம் வகுப்பது, பிறகு அதனை மக்கள் விருப்பு, வெறுப்பு பற்றிக் கவலையில்லாமல் அவர்கள் மீது சுமத்துவது என்பது கூடாது இதனையுணர்ந்துதான் ஐரிஷ்தேசத்தில், புதிய அரசியல் திட்டத்திற்கு மக்கள் சம்மதம்பெறபொதுமக்கள் வாக்கெடுப்பு நடந்தது.

ஸ்விட்சர்லாந்தில், 30,000 மக்கள் விரும்பினால், அல்லது 8 மாகாணங்கள் (காண்டன்கள்) ஒன்று சேர்ந்து தெரிவித்தால், குறிப்பிடும் பிரச்சினைபற்றி வாக்கெடுப்பு நடைபெறும்.

Referendum உலக அரசியலில் உள்ள உன்னதமான ஜனநாயக திட்டம்—அதன்படி திராவிடநாடு பிரிவினை பற்றி, திராவிட மக்களின் மனதை அகில உலகுக்கும் காட்ட, தி. மு. க. திட்டமிட்டுள்ளது.

1954ல், திராவிடநாடு பிரிவினை பிரச்சினையை மக்கள் முன்வைத்த, பொதுமக்கள் வாக்கெடுப்பை நடத்திக்காட்டும். எதிர்ப்போர், திராவிட நாடு கூடாது என்று பிரச்சாரம் செய்யலாம். நாம் திராவிடநாடு வேண்டும் என்பதற்குரிய காரணங்களைக் காட்டுவோம். இருதரப்பு வாதங்களையும் மக்கள் கேட்பர். பிறகு தங்கள் வாக்குகளை தருவர். அதன் பிறகு முடிவு காண்போம்.

பொது மக்கள் வாக்கெடுப்பு நடந்த பிறகு, டெல்லியிடம் அந்த முடிவைக் காட்டுவோம் 'மக்கள் மனதறிந்து, திராவிடத்தைப் பிரித்து விடு' என்று போராடுவோம். டெல்லி பிடிவாதம் செய்தால், ஐக்கிய நாட்டு சபைக்கு பிரச்சினை செல்லும். ஆகவே திராவிடம் பிரிந்து, தீமைகள் முறிந்து, நாம் மகிழ்ந்திடும் நாள் மிகவும் நெருக்கத்திலிருக்கிறது என்பதையெண்ணி பணியாற்றுவோம்!

பட்டியல் இதோ! பணியாற்றுவீர்!

திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட ஒப்பந்தப் பத்திரத்தில், திராவிடத் தனியரசு பிரச்சினையை ஆதரிக்கிறேன். அதற்காக ஆளும் சபையில் போராடுவேன் என்று கையொப்பமிட்டு, தி. மு. க. ஆதரவைப் பெற்ற சென்னை சட்டசபை, டெல்லி பார்லிமெண்ட் ஆகியவைகளுக்கு, தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

திராவிடத் தோழர்கள் பட்டியலைக் கண்டு, நமது இலட்சிய கீதத்தை ஏற்றுக் கொண்ட இவர்களுக்கு ஆதரவு தரவேண்டும். அங்கங்கே உள்ள கிளைக் கழகத் தோழர்கள் நமது இலட்சியத்தை ஏற்றுக்கொண்ட இவர்கள் வெற்றி பெறும் முயற்சியில் ஈடுபட்டு பணியாற்ற வேண்டுகிறோம்.

சட்டசபை

வடசென்னை
(1) ஆல்பர்ட் ஜேசுதாஸ்
ஆயிரம் விளக்கு
(2) இந்திராணி பாலசுப்ரமணியம்
(3) கபாலமூர்த்தி (ரிசர்வ்டு)
சூளை
(4) எஸ். எம். துரைராஜ்
காஞ்சிபுரம்
(5) எஸ். தெய்வசிகாமணி பி. ஏ., பி. எல்.
திருப்போரூர்
(6) எஸ். முருகேசன் (முதலியார்)
சைதாப்பேட்டை
(7) ஆர். கண்ணன்
(8) எஸ். ஏ. நாகரத்தினம் (ரிசர்வ்டு)
ஸ்ரீபெரும்புதூர்
(9) டி. சண்முகம்
அரக்கோணம்
(10) பி. பக்தவக்சலம்
திருப்பத்தூர்
(11) இ. எல் ராகவன் பி. ஏ., பி. எல்.
வேலூர்
(12) ராதாகிருஷ்ணன்
(13) ஆதிமூலம் (ரிசர்வ்டு)
ராணிப்பேட்டை
(14) சி. ஏ. வரதராசன்
ஆற்காடு
(15) வி. பி. திருவேங்கடம்
ஆரணி
(16) வி. கே, கண்ணன்
வந்தவாசி
(17) சோமசுந்திரம்
வாணியம்பாடி
(18) ஏ. கே. அனுமந்தராயர்
செய்யாறு
(19) தருமலிங்கம்
குடியேற்றம்
(20) அண்ணல்தங்கோ
திருவண்ணாமலை
(21) டி. கே. வரதராஜுலு
கடலூர்
(22) எஸ். எஸ். ராமசாமி
(23) ஏ. ரத்தினம் (ரிசர்வ்டு)
பண்ருட்டி
(24) எஸ். ராதாகிருஷ்ணன் பி. ஏ.,
சிதம்பரம்
(25) சாமிக்கண்ணு
(26) சிவசுப்ரமணியன் (ரிசர்வ்டு)
புவனகிரி
(27) சீனி—திருவேங்கடம் பி. ஏ., எல். டி.
விருத்தாசலம்
(28) என். பரமசிவம்
(29) கட்டிமுத்து (ரிசர்வ்டு)
கள்ளக்குறிச்சி
(30) கே. என். ரத்தினம்
(31) கோவிந்தன் (ரிசர்வ்டு)
திருக்கோவிலூர்
(32) முத்துக்குமாரசாமி
(33) ஏ. முத்துசாமி (ரிசர்வ்டு)
உளுந்தூர்ப்பேட்டை
(34) நடேசன் (கவுண்டர்)
விழுப்புரம்
(35) வி. ஆர். நாகராசன் பி. ஏ., பி. எல்.
விக்கிரவாண்டி
(36) ஏ. கோவிந்தசாமி (நாயகர்)
திண்டிவனம்
(37) வேணுகோபால்
(38) ஜகன்னாதன் (ரிசர்வ்டு)
செஞ்சி
(39) கே. ரங்கநாதன்
மேலமலையனூர்
(40) கோபால் (கவுண்டர்) பி. ஏ., பி. எல்.
மாயவரம்
(41) கே. ஆர். சம்மந்தம்
நன்னிலம்
(42) மரியநாதன்
மணப்பாறை
(43) குழந்தைவேலு
அரவக்குறிச்சி
(44) என். ரத்தினம்
புதுக்கோட்டை
(45) சிவசாமி (சேர்வை)
முசிறி
(46) தங்கவேலு பி. ஏ., பி. எல்.
லால்குடி
(47) ராஜா சிதம்பரம்
அருப்புக்கோட்டை
(48) எம். டி. ராமசாமி
முதுகளத்தூர்
(49) ஜி. மைக்கேல்
நிலக்கோட்டை
(50) பொன்னையா (கோனார்)
(51) ஐ. சோலைமுத்து (ரிசர்வ்டு)
ஆத்தூர்
(52) வி. எஸ். எஸ். மணி
சேடப்பட்டி
(53) பி. கே. சுப்பையா
பெரியகுளம்
(54) வி. வே. குருசாமி
பழனி
(55) மங்கலம் (கவுண்டர்)
கோவில்பாளையம்
(56) கே. ஏ. சண்முகசுந்திரம்
பொள்ளாச்சி
(57) ஜெபக்கனி
திருப்பூர்
(58) முத்துகுமாரசாமி
மதுக்கரை
(59) பி. டி. அய்யாசாமி
கிருஷ்ணகிரி
(60) டி. கிருஷ்ணமூர்த்தி
அரூர்
(61) ஏ. துரைசாமி
பரமத்தி
(62) சி. சுப்ரமணியம்
செங்கற்பட்டு
(63) கே. விநாயகம்
சென்னை ஹார்பர்
(64) முகம்மதுஇப்ராகிம்
துறையூர்
(65) ப. அரங்கசாமி

பார்லிமெண்ட்

தென்சென்னை
(66) பி. பாலசுப்ரமணியம்
வடசென்னை—திருவள்ளூர்
(67) ஜேம்ஸ்போர்ட்
திண்டிவனம்
(68) திருக்குறள் முனுசாமி
(69) ஜெயராம் (ரிசர்வ்டு)
கடலூர்
(70) கோவிந்தசாமி
(71) ராசாங்கம் (ரிசர்வ்டு)
ஸ்ரீவில்லிபுத்தூர்
(72) ஜி. ஆறுமுகசாமி (ரிசர்வ்டு)
திருச்செங்கோடு
(73) பேபி (கந்தசாமி)
தர்மபுரி
(74) எல். என். கே. சுந்தரம்

காமன்வெல்த்தை விட்டு வெளியேறுக

நிறவெறி ஒழிப்போம்

மனித உரிமை வளர்ப்போம்

பிரிட்டன், ஐரோப்பாவின் தொழிற்சாலை! (Britain is the work shop of Europe) என்று, பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக் காலத்தில், பெருமிதத்தோடு கூறப்பட்டது. ஆனால், இன்று! ஐரோப்பிய நாடுகள், பிரிட்டனைப்போல — பிரிட்டனைவிட — தொழில் துறையில் பன்மடங்கு முன்னேறிவிட்டன. உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் கச்சாப் பொருள்களைக் கொண்டுவந்து, இயந்திரங்கள் மூலம் பொருள்களாக்கி, உலக மார்க்கெட்டில் உலவிய காலம் பிரிட்டனுக்கு மறைந்துவிட்டது! தனது பொருள்களை ஏற்றுமதி செய்து விற்கவும், அந்தப் பொருள்களை வாங்கி வரவும், கீழ்த்திசை நாடுகளையே பிரிட்டன் பெரிதும் நம்பிக் கிடக்கிறது.

இந்த நம்பிக்கையை நிரந்தரமாக்கிக் கொள்ளும் வகையில், பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் வகுத்தத் திட்டம் தான் காமன்வெல்த் முறையாகும்.

இந்த காமன்வெல்த் ஏற்பாட்டுக்கு தலைவர், பிரிட்டிஷ் மன்னரே தான்.

கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலாந்து, இலங்கை, பாகிஸ்தான், தென் ஆப்பிரிகா, இந்தியா முதலிய நாடுகள் இந்த காமன்வெல்தில் அங்கம் வகித்துவருகின்றன.

கலாச்சார நல்லெண்ணமும், விஞ்ஞான அபிவிருத்தி ஏற்படவும், ஒற்றுமை பெறவும், கூடி வாழவும் ஏற்படுத்தப்பட்டதே, காமன்வெல்த் ஏற்பாடு என்று கூறுவர் பலர்.

ஆனால், அந்த நன்மைகள், அங்கம் வகிக்கும் இந்திய உபகண்டத்துக்கு ஏற்படுகிறதா என்றால், பதில் ஏமாற்றம்தான்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, காமன்வெல்த்தில் அங்கம் வகிக்க இசைந்தது—பாகிஸ்தானைப் போல.

இங்குள்ள முற்போக்குக் கொள்கையினர் "கூடாது! கூடாது" என்று எதிர்த்தனர். "இப்போது தானே சுதந்திரம் அடைந்தோம் ஏன் வெள்ளையருடன் கூடி வாழ வேண்டும்?" என்று ஆத்திரமடைந்தனர்.

அவர்களுக்கு காங்கிரசாட்சியினர் சொல்லிய பதில், "இப்போது தான் சுதந்திரமடைந்தோம் என்பது உண்மை. ஆகவே தான், காமன்வெல்தில் நாம் சேருகிறோம். பொருளாதார நிலை, நமக்கு வேண்டிய பாதுகாப்பு, முதலியவைகளுக்கு பிரிட்டனின் கூட்டுறவு அவசியம்" என்று. இந்தப் பதிலால், பலர் திருப்தி அடைந்தனர்! அரும்பிய சுதந்திரம் அல்லலுக்கு ஆட்படக் கூடாதே என்கிற ஆவலால்! இந்தக் கூட்டுறவால் பலன் ஏற்படுமென்றும் நம்பினர்!!

ஆனால், இந்த ஐந்தாண்டுகளில் பலன் ஏற்படாதது மட்டுமல்ல; பழியும் ஏளனமுமே பரிசாகக் கிடைத்திருக்கிறது.

காமன்வெல்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும், நேச உள்ளத்தோடு பழகவேண்டும். புலியும் மானும், சிங்கமும் சிறுநரியும் அடைக்கப்பட்ட கூடாக இருந்தால், ஒற்றுமைத் தென்றலும் நேச மணமும் எங்ஙனம் எழும்பும்?

வெள்ளை நாடுகள், இந்திய உபகண்டத்தை — மதிக்கவில்லை. முப்பது கோடிமக்கள் நிரம்பிய பெரிய துணைக்கண்டம், இது. காமன்வெல்திலே இணைந்திருக்கும் நாடுகளிலேயே மிகமிகப் பெரிய நாடு இது. ஆனால், இதை மதிப்பாரில்லை! இந்நாட்டின் மக்களைக் கவனிப்பாரில்லை!

ஐக்கிய மனோபாவம் பரவவேண்டுமேயானால், அதில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் சம அந்தஸ்து இருக்கவேண்டும். மாச்சரியம் வளராமல், மனோ நிலை மாறாமல், நட்பு வளர, அது மிகமிக அவசியம்.

ஆனால், வெள்ளையர், இந்தியாவை சம நோக்கோடு பார்க்கவில்லை! இழிவு படுத்துகின்றனர்!! கேவலமாக மதிக்கின்றனர்!!

இந்தக் கேவலத்தைச் சுட்டிக்காட்டும் தீர்மானமொன்றும், நமது மாநாட்டின் மக்கள் கடலால் நிறைவேற்றப் பட்டது. காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் மற்றொரு நாடான தென் ஆப்பிரிக்கா பற்றிய தீர்மானம், அது.

தென் ஆப்பிரிக்கச் சர்க்கார், கருப்பு நிற மக்களைப் படுத்திவரும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. வெள்ளையரே உயர்ந்தவர், ஏனையோர் அவர் தம் அடிமைகள், என்கிற இன வெறியோடு, அவர்கள் நடாத்திவரும் கொடுங்கோலாட்சி குறித்து. நாம் பன்முறைகண்டித்துவந்துள்ளோம். ஆயினும் இன்னும் அந்த அட்டூழியம் அடங்கிய பாடில்லை! இந்த அக்கிரமம் ஒழிய காந்தியாரின் மகன் மணிலால், தாம் குழுவோடு அறப்போர் புரிந்து வருகிறார். அவர் தம் வீரத்தைப் பாராட்டி, மலான் கொடுமையைக் கண்டித்து நமது பிரதிநிதிகள் நிறைவேற்றிய தீர்மானம்:

(24) தென் ஆப்பிரிக்க மலான் சர்க்காரின் அநீதி நிரம்பிய நிறவெறிப் போக்கை கண்டிப்பதோடு, நிறத்திமிரை எதிர்த்து அறப்போர் புரிந்து வரும் மணிலால் காந்தியையும் அவரது குழுவினரையும் பாராட்டுகிறது.

(ஆ) மேற்படி போராட்டத்திற்கு தென் ஆப்பிரிக்காவில் வதியும் திராவிட மக்கள் தங்களது ஆதரவைத் தரவேண்டுமென்றும் இம் மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

இருபதாம் நூற்றாண்டிலும், இந்த மானக்கேடு! மனிதனை மனிதன் மதிக்காததிலே! மானமுள்ளோர் எவர்தான், மலான்கொடுமையைச் சகிப்பர். ஆகவேதான், நாம் அறைகூவல் விடுத்திருக்கிறோம்—தென் ஆப்பிரிக்காவில் வாழும் நமது மக்களுக்கு! நிறவெறியை எதிர்த்து நடைபெறும் அறப்போருக்கு தென் ஆப்பிரிக்கா வாழ் திராவிடர் தக்கமாது ஒத்துழைப்பை அளிப்பர் என மனமார நம்புகிறோம் — எதிர்பார்க்கிறோம்.

மனித உரிமையை நிலைநாட்ட இந்தியாவைச் சேர்ந்தோர் அறப்போரிலீடுபடுகின்றனர். புத்தகசாலைகளிலும், ரயில்வே நிலையங்களிலும், பொதுச் சாலைகளிலும் 'வெள்ளையருக்குமட்டும்' என்றிருக்கும் போர்டுகளை அகற்ற ஒழிக்க—தம்மைத்தத்தம் செய்யத்தயாராயிருக்கின்றனர். அவ்வளவு, விவேகமும், மனித உரிமையை நிலைநாட்டும் ஆர்வமும் எழும்புகிறது!

ஆனால், மனித உரிமையைப் பேசித்திரியும் பிரிட்டன், காமன்வெல்த்தின் மணிமுடியெனக் கூறித்திரியும் பிரிட்டன், என்ன செய்கிறது? மலானைக் கண்டித்ததா, மனித உரிமையைப் பெற்றுத்தர முன்வந்ததா, வெள்ளை நிறவெறியை ஒழிக்க மாநாடு கூட்டிற்று, சமரசப் பேச்சு நடத்திற்று?

மாறாக, இருமாந்து கிடக்கிறது— எதுவும் பேசுவதில்லை!

இந்நிலையில், காமன்வெல்த்தில் தென் ஆப்பிரிக்காவும் ஒரு அங்கம்!!

அங்கே இந்தியாவும் அமர்ந்திருக்கிறது!!

வெள்ளை நிறவெறி தென் ஆப்பிரிக்காவில் என்றுமட்டுமல்ல, மற்றொரு காமன்வெல்த் நாடான ஆஸ்திரேலியாவிலும் தாண்டவமாடுகிறது. பரந்துகிடக்கும் ஆஸ்திரேலிய கண்டத்தைத் தங்கள் சொந்தச் சொத்தாகக் கருதுகின்றனர்—வெள்ளையர். வெள்ளையர் தவிர வேறு எவரும் இங்கே குடியேற முடியாது. குடியேற அனுமதிக்காத சட்டம் அங்கே தாண்டவமாடுகிறது, வெள்ளைநிறக்கொள்கை என்கிற பெயருடன். வெள்ளையர் மட்டுமே அங்கே உலவலாம், வாழலாம்! வேறு எவரும் கூடாது. ஏனெனில் அவர்கள் கருப்பர்!

இந்த இழிவு மனப்பான்மைபற்றி எதுவும் கூறவில்லை, காமன்வெல்த்தின் தலைமையான பிரிட்டன்.

கவனிப்பதுமில்லை, காதுகொடுத்துக் கேட்பதுமில்லை.

டில்லிக்கு வருகிறார்கள் ஆஸ்திரேலிய அரசு மன்றப் பிரதிநிதிகள். நேருவோடு அமர்ந்து விருந்துண்கிறார்கள்! பாராட்டுகிறார்கள்!! ஆனால், தங்களது நாட்டில், நேரு வாழும் உபகண்டத்து மக்களை நாயினும் கேடாக மதிக்கிறார்கள்—கொடுமைப்படுத்துகிறார்கள்.

இதைத் தாங்கிக்கொண்டு ஏன் காமன்வெல்த்தில், இருக்க வேண்டும்? காமன்வெல்த்தில்இணைந்திருப்பதால் அடையும் தொல்லைகள்தான் எத்தனை! பிரிட்டன் நாணயமதிப்பைக்குறைத்தால் நாமும் குறைக்க வேண்டியவர்களானோம் என்றுகூறி 'டிலரை' குறைத்ததே! அதுபோல பலப் பல தொல்லைகள்!!

தொல்லைகளைப் பரிசாகப்பெற்று, மானத்தையும் இழந்து, ஏனிருக்க வேண்டும், காமன்வெல்த்தில்?

மலேயாக் காடுகளில் சுடப்பட்டு வீழ்த்தப்படுகிறானே, கணபதியும் லோகநாதனும், அவர்களைக் காப்பாற்ற காமன்வெல்த் என்ன செய்தது? வாய்மூடிக் கிடக்கிறதே! பிரிட்டனின் பெருமை, ஏன் அங்கே, செல்லவில்லை. பார்வை, அந்தப் பரிதவிக்கும் உயிர்கள்மீது ஏன் செல்லவில்லை?

இழிவு
அவமானம்
தொல்லை
சுதந்திரமின்மை

இத்தனையையும் தாங்கிக்கொண்டு காமன்வெல்த்தில், இந்திய உபகண்டமும் ஏனிருக்கவேண்டும்-என்று, ஆத்திரத்தோடு கேட்கிறது, தி.மு. கழகம். அதனால்தான் கீழ்க்கண்ட தீர்மானம் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேறிற்று. அத்தீர்மானம்:—

(22) பொதுநலனைக் குறித்து பல நாடுகள் ஒரு அமைப்பமை ஏற்படுத்திக்கொள்வது தேவையானதாக இருந்தபோதிலும், காமன்வெல்த் கழகம் மேற்படி நோக்கத்துக்காகவே இயங்குவதாகக் கூறப்பட்டபோதிலும், காமன்வெல்தில் அங்கம்வகிக்கும் இந்தியாவுக்கு சம அந்தஸ்து தர மறுக்கும் போக்கில் வெள்ளை நிறவெறித் திட்டத்தைக் கடைப்பிடித்தும், காமன்வெல்த் கழகம் அந்தப் போக்கை மாற்ற ஆவன செய்யாதிருப்பதால், இந்த இழிநிலையை ஏற்றுக்கொண்டு இந்தியா மேற்படி அமைப்புடன் இணைந்திருப்பது தன்மானக் குறைவு என்று இம்மாநாடு கருதுவதால் மேற்படி போக்கைக் களையக்கூடும் அறிகுறியாக காமன்வெல்த்தைவிட்டு இந்தியா வெளியேறிவிடவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

* முன்னேற்றக் கருத்துகள்!
* தீவிர எண்ணக் கோவை!

போராட்டம்

திராவிடர்
முற்போக்கு வார இதழ்

விவரங்கட்கு:
நிர்வாகி, போராட்டம்,
ஆ.

அறிவுத்தொண்டே எமது பணி

எங்கள் நூல்கள் குடும்ப விளக்குகள்

அண்ணாவின் சிந்தனை ஓவியங்கள்

அரங்கண்ணல் மதியழகன் வில்லாளன் தீட்டிய கருத்து சித்திரங்கள்

இதயத்திலே குடியேறவேண்டிய ஏடுகள்

புது வெளியீடுகள்

வாணன் தீட்டிய
ரஷ்ய இலக்கியம் 1-8-0
(அண்ணு முன்னுரை)

மதியழகன் எழுதிய
நன்றியாருக்கு? 0-12-0
மு. கருணாநிதியின்
பூந்தோட்டம் 0-3-0

திராவிடப்பண்ணை தெப்பக்குளம் திருச்சி

2 லட்சம் உறுப்பினர்கள் வேண்டும்

சட்டதிட்டம் நிறைவேற்றிவிட்டோம்

சரிவர நடைபெற வழி வகுக்கவேண்டும்

பணிமனை இயங்கிட பணம் வேண்டும்

திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்தபடியுள்ளது. திராவிடத்தின் திக்கெட்டிலும் அதன் குரல் கேட்கிறது. அக்குரலின் எதிரொலி கேட்காத இடமில்லை. ஆயிரத்தை எட்டிப்பிடிக்கும் கிளைக்கழகங்கள் தினமும், இலட்சிய முரசு கொட்டியபடியுள்ளன.

திராவிடத்திலே மட்டுமல்ல, அதன் எல்லையைத் தாண்டியும் நம் கிளைகள்—பம்பாயில், அலகபாத்தில், பூனாவில், கல்கத்தாவில் நம் கழகத் தோழர்கள் களிப்போடு எழுதுகிறார்கள்! இலங்கையில் நம் கிளைகள் பரவிவருவதை தினந் தினம் தோழர்கள் தெரிவிக்கிறார்கள்! ரங்கூனில், கோலாலம்பூரில் நம் கிளைகள்—பர்மாவில் நம்கிளைகள் பரவி வருவதைக் கேட்க மகிழ்கிறோம்! வியட்னுமிலிருந்து தோழர்கள் கிளைக் கழக கொடியே அனுப்பியிருக்கிறார்கள்! செய்கோனிலிருந்து நன்கொடை வசூலித்து அனுப்பியிருக்கிறார்கள்!

இந்த வளர்ச்சி சாதாரணமான வளர்ச்சியென்று கூற முடியாது. இரண்டாண்டு காலத்தில், எந்த இயக்கத்திற்கும், இதுவரை ஏற்படாத வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இந்த வளர்ச்சிக்கு அடிப்படை ஆர்வம்—உணர்ச்சி—எழுச்சி எல்லாம்! ஆனால், இதற்கு எந்தவிதமான வரையறுத்த சட்டதிட்டமும் இல்லை, கட்டுப்படுத்த, ஊக்குவிக்க! எனினும் வளர்ந்திருக்கிறது கழகம்—எவரும் கண்டு வியக்கிற அளவு வளர்ந்திருக்கிறது!

கழகம் துவங்கிய நாளிலேயே, கழகத்திற்கென ஒரு தனிச் சட்டதிட்டம் வகுத்துத் தர ஒரு குழு அமைக்கப்பட்டது.

அக்குழு, ஒரு நகலை தயாரித்து அனுப்பிற்று. அதனை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் மத்திய கழகம், ஒரு புதிய நகலைத் தயாரித்து அனுப்பிற்று. மதுரையில் கூடிய பொதுக் குழுவில் இது விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியாக மாநில மாநாட்டிலும் அதனை ஏற்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சட்ட திட்டம் கிடைத்துவிட்டது! இனி அதனை சரியான முறையில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்!

சட்ட திட்டம் வேண்டும் என்றவர்களும் நாம்—அதனைத் தயாரித்தவர்கள், திருத்தங்களைக் கொண்டு வந்தவர்கள், பிறகு ஏற்றுக்கொண்டவர்கள் எல்லாம் நாம்—இனி அதன்படி நடக்கவேண்டியவர்களும் நாமே தான்.

சட்ட திட்டம் கூறுகிறபடி, மாநில மாநாட்டிற்கு தலைமை ஏற்கும் பொதுச் செயலாளரை நாம் தேர்ந்தெடுத்துவிட்டோம்.

சட்ட திட்டம் வேலை செய்யத் தொடங்கிவிட்டது—முதல் வேலை நடந்துவிட்டது. இனி முறைப்படி காரியங்கள் நடந்தாகவேண்டும். அதற்கு தனியாக பணிமனை அமைந்தாகவேண்டும். அதில் தக்க பொறுப்பாளர் நியமிக்கப்பட வேண்டும்.

நமது உணர்ச்சியினால் சென்னையில் கழக மாளிகை அமைத்துவிட்டோம். தலைமை நிலையம் தயாராக உள்ளது. இனி பணிமனை அங்கே இயங்கவேண்டும். அதற்குப் பணம் அதிகம் வேண்டும்.

மாநாட்டிலேயே, உறுப்பினர் சேர்க்கும் முயற்சி தொடங்கப் பெற்றது. மாவட்டச் செயலாளர்கள் ஆர்வத்தோடு, உறுப்பினர் சேர்த்தனர். அதனைத் தொடர்ந்து செய்யவேண்டும். குறைந்தது இந்த ஆண்டு இரண்டு லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்தால்தான் நம் வளர்ச்சிக்கு அர்த்தமுண்டு. நம் முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கும். அதற்குத் தோழர்கள் இன்றே முன்வர வேண்டும்.

மோட்டார் இயந்திரம் தயாராகிவிட்டது. இனி ஓட்ட பெட்ரோல் வேண்டும். இயந்திரம் கெடாமலிருக்க அடிக்கடி தடவ மசை வேண்டும். அதுபோல நம் இயக்கத்திற்கு சட்டதிட்டம் தயாராகிவிட்டது. தலைமை நிலைய மாளிகை வாங்கியாகிவிட்டது. இனிதலைமைப் பணிமனை இயங்கிட பணம் வேண்டும். இந்த இயக்கம் இயந்திரம் துருப்பிடிக்காமலிருக்க, குறைந்தது மாதம் இரண்டாயிரம் வேண்டும். வேகமாக வேலை செய்ய வேண்டுமானால் இன்னும் அதிகம் வேண்டும்.

இப்படி, மாநில மாநாட்டுத் தலைவர் சி. என். ஏ. கூறியபொழுது, நாம் உண்மையை உணர்ந்து, 'முடியும், தருகிறோம்' என்றோம். அதனை நினைவுபடுத்த நினைக்கிறார்கள்.

மற்றவர்கள் இந்நேரத்தில் தட்டு கேட்க போவார்கள். வீடு வீடாக—நாம் உறுப்பினர் சேர்க்கச் செல்வோம்.

இப்படி அவர் குறிப்பிட்ட பொழுது, நாம் ஆரவாரித்தோம். ஊர் திரும்பிவிட்டோம். இனி உறுப்பினர் சேர்க்கவேண்டும். லட்சக்கணக்கில் உறுப்பினர்களைச் சேர்த்துக் காட்டவேண்டும்.

உறுப்பினர் சேர்ந்த பிறகுதான மற்ற எல்லாக் காரியங்களும் நடைபெறமுடியும். உறுப்பினர்கள் சேர்த்த பிறகுதான் கிளையமைத்து, அதிலிருந்து வட்டக் கிளை நிறுவி, மாவட்டக் கிளை ஏற்படுத்தி, பொதுக்குழு அமையவேண்டும்.

ஆகவே, உறுப்பினர் சேர்ப்பது முதல் வேலை — இயக்கம் செய்ய வேண்டிய முன்னணியில் உள்ள முக்கிய பணி.

தோழர்களே உறுப்பினர்கள் சேர்க்க, உடனே தொடங்குங்கள்! உறுப்பினர் ரசீது புத்தகங்களுக்கு எழுதுங்கள்!

உலக சமாதானம் நிலவச் செய்வோம்

முதலாளித்துவ முகாம்—பொதுவுடைமை முகாம் என்று, உலகம், இரு கூடாரங்களாகக் கிடக்கிறது. கடந்த உலகப் போருக்குப் பின் இந்த இரு முகாம்களுக்குமிடையே வளர்ந்து வரும் தகராறுகளையும், உலகத்தின் பொதுச்சபை என்று எல்லா நாடுகளும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்ய வல்லரசுக்கும் முதலாளித்துவ வல்லரசுகளுக்குமிடையே ஆரம்ப முதல் இன்றுவரை வளர்ந்துகொண்டிருக்கும் கருத்துப் பூசல்களையும், உலகம் அறியும்.

நாமும், பலப் பல சமயங்களில், இந்தப் போக்கு இன்னொரு பெரும் போரைக் கொண்டுவந்து விடுமோ, என்று கலங்கியிருக்கிறோம்.

ரஷ்ய வல்லரசை, கழுகுப் பார்வையோடு முதலாளித்துவ நாடுகள் பார்க்கின்றன—மிரட்டுகின்றன, என்று மக்களுக்கு விளக்கி வந்திருக்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சபை, உலக சமாதானத்துக்காக எல்லா நாடுகளும் சேர்ந்து அமைத்துக் கொண்ட ஸ்தாபனம். அதில், ரஷ்ய வல்லரசும் அங்கம் வகிக்கிறது—இன்னும் பல நாடுகளும் கலந்திருக்கின்றன. ஆனால், செஞ்சீனாவுக்கு இன்னும் இடமளிக்கப்படவில்லை! அமெரிக்க ஏகாதிபத்தியம், தனது வெறிப்போக்கால், செஞ்சீனாவை அனுமதிக்காமல் தடுத்து வருகிறது. இந்த ஆதிபத்திய வெறியை நாம் கண்டித்து வந்துள்ளோம். இந்தப் போக்கு, சியாங்கேய் ஷேக்குக்கு கைலாகு கொடுத்து, மற்றொரு போரை உண்டாக்குமெனக் கருதி, பொதுவுடைமைப் பூங்கா ஆகிவரும் செஞ்சீனாவை மேற்கு வல்லரசுகள் அங்கீகரிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது கூடாரத்துக்குள் பல நாடுகளை இழுத்துப்போட, பண ஆசையைக் காட்டுகிறது. அந்தப் பணமோகினியைக் காட்டி, பல நாடுகளை தன் பக்கம் சேர்த்து, மற்றொரு முகாமான பொதுவுடைமை முகாமை மிரட்ட முயன்று வருகிறது. இந்தக் கெடுமதி, மற்றொரு போருக்கான ஆயத்தமேயாகும்.

இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உலக சமாதானத்துக்கென மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நேசக்கரம் நீட்டியுள்ளோம் — நம்மாலான ஒத்துழைப்பைத் தருவதற்கு தயாராக இருக்கிறோம்.

இந்த முடிவை யொட்டி, நமது மாநில மாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

(21) உலக சமாதானத்திற்கும், மக்கள் முன்னேற்றத்திற்கும், நல் வாழ்வுக்கும் ஊறு செய்யும் வகையில், உலக வல்லரசுகள் தங்களுக்குள் ஏற்படும் ஆதிக்கப் போட்டியின் காரணத்தினால், மூன்றாவது உலகப்போர் ஏற்படும் வகையில் எதேச்சாதிகாரப் போக்கில் செல்வதை இம்மாநாடு கண்டிப்பதுடன், உலக சமாதானத்திற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு திரட்டுவதென்று இம்மாநாடு முடிவு செய்கிறது.

வேகமாக விற்பனையாகிவருகிறது!

திராவிடர் டைரி—1952

திராவிடர் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய நாட்குறிப்பு. | தி. மு. க. தோழர்கட்கெல்லாம் பூரிப்பளிக்கத்தக்க வெளியீடு

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கிய எழில் ஏடு.

* அறிஞர் அண்ணாதுரையின் 365 பொன்மொழிகள்—சென்ற இரண்டு ஆண்டு டைரிகளிலும் வெளிவராதவை, புதியவை

* அண்ணா, சிற்றரசு, கருணாநிதி, மணிமொழியார், மனோகரன், என். வி. நடராசன், கழக மாளிகை—புகைப்படங்கள்,

* தி. மு. க. கொடி—இரு நிறத்தில்

* கழக சட்டதிட்டங்களின் விவரம்

* தி. மு. க. கிளைகள் 670-ன் செயலாளர், துணைச்செயலாளர் பொருளாளர், விளம்பரச் செயலாளர் பெயர்கள்—மாவட்டவாரியாக. அதுபோலவே மாணவர் கிளைகளின் விவரங்கள்.

* திராவிடர் திருநாட்கள், தபால் தந்தி விற்பனைவரி வருமான வரி முதலிய விவரங்கள் யாவும் அடங்கியது இந்த டைரி.

570 பக்கங்கள் விலை ரூ 1—0—0

ஒரு பிரதி வேண்டுவோர், சாதா தபாலில் அனுப்ப ரூ. 1-2-0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1-6-0-ம் அனுப்ப வேண்டும். விற்பனையாளர் கழிவு 20 o/o முன்பணமின்றி எவருக்கும் டைரி அனுப்பப்பட மாட்டாது.

போர்வாள் அலுவலகம் பவழக்காரத்தெரு சென்னை 1.

கண்ணீர்த் துளிகளே, நாட்டின் [ம]ணிகளே, காணிக்கை தாருங்கள்

திராவிடநாடு

காஞ்சி] 23—12—51 [ஞாயிறு

நான்கு நாட்கள்

★

13, 14, 15, 16 தேதிகள்! அந்த நான்கு நாட்கள்!! வரலாற்றுப் பொற்றகடுகளில், வைரக் கற்களால் பொறிக்கப்பட வேண்டிய திருநாட்கள்! இழந்த தனியரசை மீண்டும் கண்ணெதிரே கொண்டுவந்து நிறுத்திய இன்ப நாட்கள்! கனவோ, நினைவோ, என ஐயுறத்தக்க வண்ணம், சமுகத்தின் மலைபோன்ற தோற்றத்தை உலகினருக்குக் காட்டிய நாட்கள்! நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலத்திற்கு முன்னரே உலக நாகரீகங்களின் தாயகமாகத் திகழ்ந்த திராவிடம், பற்பல நூற்றாண்டுகளுக்குப் பின் மறுபடியும் பெருமிதத்துடன் தலை நிமிர்ந்து நின்ற நாட்கள்! கடல்கள் கலந்தனவோ, என்று திகைக்கும் வண்ணம் சமுகக் காளைபர் ஒன்று கூடி, பொது மன்றம் நிறுவிய நன்னாட்கள்! மலைகள் மோதினவோ, என மாற்றாரும் மருளும்படி விடுதலை முழக்கம் விண்ணதிரக் கிளம்பிய நாட்கள்! வாழ்விலும் தாழ்விலும், இலட்சியத்தை மறவோம் என்று தம்பிமார்கள் வாக்குறுதி தரக்கேட்ட வீரம் செறிந்த நாட்கள்! நாம் பெற்ற செய்களன்றோ இந்த இளம் சிங்கங்கள், என்று தாய்மார்கள் பூரித்த பொன்னாட்கள்! திராவிடத் தனிநாடு தோன்றியதும் இந்த நான்கு நாட்களிலேதான்!

ஆம், திராவிடத் தனிநாடு தோன்றிவிட்டது! பதின்மூன்றாம் தேதி, கழகக் கொடி நீலவானை நோக்கிச் சென்ற பொழுது, [illegible] அனுமன் வருவான்போல கதிரவன் கண்பகலில் கடுவானத்திற்கு வந்த பொழுது, ஒரு தனிநாடு தோன்றிவிட்டது! இன்றைய ஆட்சியாளர்—கல் சுமந்த கசடரின் பரம்பரையினர்—அக்கொடிக்கு இன்று வணக்கம் செலுத்தவில்லை—உண்மைதான். ஐக்கியநாடுகள் சபையில் திராவிடநாடு இன்னும் அங்கம் பெறவில்லை—உண்மைதான். ஆனால் வடவரின் வணக்கம் பெற்று, ஐ.நா. சபையில் அங்கம் பெறும் நாள் வெகு தூரத்திலில்லை. திராவிடப் பெருங்குடி மக்களின் பாராளுமன்றம்—மாநில மாநாடு. அதன் தீர்மானத்திற்கு, வடவராயினும், கசடராயினும், வல்லரசாயினும் முடி பணிந்தே தீரவேண்டும். மக்களின் ஒருமித்த முடிவை எதிர்த்து வெற்றி பெறக்கூடிய சக்தி உலகில் எதுவுமில்லை. ஆகவேதான் கூறுகிறோம், திராவிடத் தனிநாடு தோன்றிவிட்டதென்று.

தனிநாடு தோன்றிவிட்டது—அதற்குத் தனியரசு அமைத்தாக வேண்டும். கப்பல் கட்டியாகிவிட்டது—அதில் இயந்திரத்தைப் பொருத்தியாக வேண்டும். மாளிகைக்கு இடம் வாங்கி, அஸ்திவாரமிட்டாகிவிட்டது—சுவர்களெழுப்பி மேல்தளங்கள் கட்டவேண்டும். அந்தப் பணியும் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

★

"கட்டளையிடுபவனல்ல—[உங்களு]க்குக் கட்டுப்பட்டவன்"

இன்பத் திராவி[ட]ம் இலட்சியம்

★ மாநில மாநாட்டில் தலைமையுரை ★

திராவிட முன்னேற்றக் கழகம் வளருமோ, இடையிலேயே அழிந்துபடுமோ என்ற ஐயம்—சந்தேகம் யாருக்கேனும் இருந்திருக்குமானால், அவர்களுக்கு இந்த மாநாடு இதற்கு அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய பந்தல், அலங்கார விளக்குகள், அழகிய முகப்பு—கூடியுள்ள லட்சக்கணக்கான மக்கள்—இவை தெளிவாக விளக்கும். இங்கு குழுமியுள்ள உறுப்பினர்கள் வண்ணிடத்திலும், கட்சி கருத்துகளிடத்திலும் காட்டும் ஆர்வத்தைக்காண மகிழ்கிறேன். அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

என்னைப்பற்றி பலர்புகழ்ந்துரைத்தார்கள். அவைகளையெல்லாம், அழகிய தமிழில் அன்போடு வீசிய ஆசைவார்த்தைகள் என்றே கருதுகிறேன். ஏனெனில் அத்தகைய சிறப்புரைகளுக்கு ஏற்றவனல்ல நான்! என்னை, அருமைத் தம்பிமார்கள், அண்ணா கட்டளையிடுங்கள், கடமையைச் செய்கிறோம், என்று அடிக்கடி வற்புறுத்தினார்கள். நான் கட்டளையிடுபவனல்ல, அத்தகைய நிலையிலே உள்ளவனுமல்ல! சிலர், என்னை வழிகாட்டுங்கள், வாகைசூடி வருகிறோம் பாருங்கள் என்றார்கள். நான் வழிகாட்டியுமல்ல என்றே அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். வழிகாட்டி, மத சம்பந்தமாக வந்த ஒரு வைதீக வாடை அடிக்கும் சொல்.

இரண்டாண்டுகளுக்கு முன் ஏற்பட்ட நெருக்கடியில் நிச்சயம் சிதறுண்டுவிடும், சுக்கு நூறாகிவிடும் திராவிட இயக்கம் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் உங்களது நம்பிக்கை வெற்றி பெற்றுவிட்டது! நீங்கள் கடைப்பிடித்த ஒற்றுமையே இன்று இந்தப் பெரிய சந்தியாக வளர்ந்திருக்கிறது. நீங்கள் என்னிடம்கொண்டுள்ள பற்று—காட்டும் பாசம் கண்டு பூரிப்படைகிறேன். அந்தப் பாசத்திற்குக் கட்டுப்பட்டவனே தவிர, கட்டளையிடுபவனுமல்ல, வழிகாட்டுபவனுமல்ல! நீங்கள் என்மேல் வைத்துள்ள நம்பிக்கை கெடாமல், இதுவரை நடந்துவந்தேன். எதிர்காலத்திலும் நடந்துகொள்வேன் என்று உறுதி கூறுகின்றேன்.

நான் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவன். அரசியலில் கண்ணியத்தை விரும்புபவன்—கட்டளையிடுபவனல்ல! ஜனநாயகம் வளர்ந்துள்ள இந்நாளில் கட்டளையிடும் தலைவர்கள் தோன்றமுடியாது—தோன்றவும் கூடாது! ஜனநாயகமில்லாவிட்டால், அரசியலைப்பலன் ஏதும் இல்லை. நான் நானாக ஏதும் செய்வதில்லை. செய்யவும் மாட்டேன். உங்களிலே பலரின் கருத்துரைகளைக் கேட்கிறேன், தொகுத்துப்பார்க்கிறேன். பிறகு அதன்படி முடிவிற்கு வருகிறேன். உங்கள் போராற்றலை நம்பித்தான் எனக்களிக்கப்பட்டுள்ள பொறுப்பை ஏற்று நடத்திவருகிறேன். அளவுகடந்த பொறுமையுடன் பணியாற்றுகிறேன்.

இந்த மாபெரும் பந்தலில் லட்சக்கணக்கில் கூடியிருக்கிறோம். இந்த உணர்ச்சி, உத்வேகம், எழுச்சி எல்லாம் நமது முன்னாள் தலைவர் சர். தியாகராயர் நமக்கு அளித்தபிச்சை யென்றே கூறுவேன். செல்வக்குடியிலே பிறந்த அவர் தேய்ந்துவரும் திராவிடச் சமுதாயத்தினைத் தட்டியெழுப்பாமலிருந்தால், நாம் இவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்க முடியாது. நாயர். இந்தியாவில்மட்டுமல்ல, இங்கிலாந்திலேயும் தமது புயல்குரலை எழுப்பியிராவிட்டால், நாம் வளர்ந்திருக்கமுடியாது. பல தலைவர்கள் அன்று திராவிடச் சமுதாயத்திற்காகப் போராடினார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் மனம் நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் தலைவர் பெரியாரையும் நினைவு கூர்கிறேன். இதே மேடையில், நமது தோழர் ஜீவாவும் இருக்கிறார். நாங்கள் வேறு வேறு இயக்கத்திலே இன்று பணியாற்றுகிறோம். ஆனால், பெரியாரும், ஜீவானந்தமும் நானும் ஒரு இடத்திலிருந்து பணிபுரியும் நாள் எதிர்காலத்திலுண்டு என்ற நம்பிக்கை எனக்குண்டு. கொள்கைச் சந்தையிலே கடை வைத்திருப்பவனல்ல நான்—அவர்களும் அப்படியே. நான் என்கொள்கையைவிட மாட்டேன். அவர்களும் விடமாட்டார்கள். விடக்கூடாது. ஆனால், மூவரும் சந்திக்கும் ஒரு முகாம்ஏற்படத்தான்போகிறது. அதுபொது உடைமை முகாமாக இருக்கட்டும்—சமதர்ம முகாம் என்று பெயர் பெறட்டும். நான் கவலைப்படவில்லை ஆனால் அத்துடன் 'திராவிட' என்ற அடைமொழி சேரவேண்டும். திராவிடப் பொதுவுடைமைக் கட்சி யென்று கூறுங்கள். அதிலே முதல் அங்கத்தினன் நான். திராவிடச் சமதர்மக் கட்சியென்று சொல்லுங்கள். அதிலே நான்தான் முதல் அங்கத்தினன். திராவிடத் தீவிரவாதிகள் கட்சி—இருக்கட்டும். திராவிட புரட்சி இயக்கம்—ஆட்சேபணையில்லை. அவைகளிலே நான் முதல் உறுப்பினன். ஆனால் திராவிட என்ற அடைமொழி இல்லாவிட்டால் அங்கே நான இருக்கமாட்டேன்.

இந்தப் பந்தலைச் சுற்றிப் பார்க்கிறேன். ஒளிவீசும் விளக்குகளை, அவைகளுக்கு ஒளி தரும் உங்களை—உங்கள் கண்களை—கண்களிலே புரண்டெழும் கனலைக்காண்கிறேன். மகிழ்கிறேன. ஒரு கணம் பிரமித்து நிற்கிறேன். இவ்வளவும் நம்மாலா, நாமா இவ்வளவையும் செய்தோம் என்று எண்ணுகிறேன்! நம்மைப் பற்றி ஆருடம் கணித்தவர்களின் ஆருடம் பொய்த்து விட்டதே—அந்த அரசியல் ஆருடக்காரர்கள் இதனைக் கண்டு நிச்சயம் மனம் வெதும்பிப்போவர். இதிலிருந்து நமக்குத் தெரிகிறது அவர்களிடம் இருப்பது அவசர அகராதியே தவிர அனுபவ அகராதியல்ல என்பது!

பந்தலைச் சுற்றிலும், நம் கிளைக் கழகங்களின் கொடிகள் பறக்கின்றன. ஆனைமலையிலே நம் கழகம், அதன் அடிவாரத்திலேயும் நம் கழகம் இருக்கிறது. மலைப்பிரதேசத்திலே, பள்ளத்தாக்கிலே, கணவாய் பூமியிலே, சமவெளியிலே பூஞ்சோலை நிறைந்த இடங்களிலே, நஞ்செய் நிறைந்த தஞ்சைப் பிரதேசத்திலே, பஞ்சம் பயங்காட்டும் ராமநாதபுரத்திலே, மற்ற மற்ற மாவட்டங்களிலே இருந்தெல்லாம் நம் கிளைக்கழக கொடிகள் வந்துள்ளன. இன்னும் கடல் கடந்த பிரதேசங்களிலிருந்தெல்லாம் கிளைக் கழக கொடிகள் வந்துள்ளன. இலங்கை பர்மா, இந்தோசீனா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் கொடிகள் வந்துள்ளன. அவை பறந்திடும் காட்சியைக் கண்டு பூரிக்கிறோம் நாம். ஆனால் சிலர் ஆச்சரியப்படுகிறார்கள். இன்னுஞ் சிலர் அச்சப்படுகிறார்கள். வேறு சிலர் சந்தேகிக்கிறார்கள். இது என்னென்ன செய்யுமோ, எதெதற்கு வழிவகுக்குமோ என்ற ஐயம் அவர்களைவாட்டுகிறது! அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம், கண்ணியத்திற்குத் தோழன், கொள்கைக்கு நண்பன், திராவிடத்தின் பாசறையென்பதை உணருங்கள்.

பொதுவுடைமைக்கு ஒரு எல்லை வேண்டும் என்கிறேன். திராவிட நாட்டு எல்லைக்குள் பொதுவுடைமையைப் பரப்ப முடியும் என்கிறேன். அந்த எல்லையை—எவருக்கும் தொல்லைதராத எல்லையை—நமது மூதாதையர் இரத்தம் சொரிந்து வரைந்த எல்லையை—பிறகு ஏமாளித்தனத்தால் இழந்துவிட்ட எல்லையை—எத்தர்கள் தட்டிப் பறித்துக்கொண்ட எல்லையை—நம் எழுச்சியால் மீண்டும் பெற வேண்டிய எல்லையை, அடைந்தே தீருவோம் என்கிறோம்—A Home-Land For Our Nation என்பார். திராவிட இனத்தற்குரிய திராவிட நாட்டை அடைவதே, தி. மு. கழகத்தின் அடிப்படை இலட்சியம்.

அந்த இலட்சியத்தை நோக்கி, விடுதலைப் பாதையிலே நடந்து செல்கிறோம். அந்தப் பயணத்தின் இடையிலே வரும் பிரச்சினைகள், பாதையிலே வரும் நண்பர்களைப் போல! பேசிக் கொண்டே செல்வோம். பிரிவோம். ஆனால் பாதையை விடமாட்டோம். மழைபெய்தால் ஒதுங்கி நிற்போம் சிறிது நேரம்—ஓய்ந்து விடமாட்டோம். தொடர்ந்து நடப்போம். பனி, மழை, வெய்யில், குளிர், இரவு, பகல் என்ற எதுவும் பயணத்தை நிறுத்தாது, பாதையை மாற்றாது.

பாதையில் பிணங்கள் கிடக்கலாம். எலும்புக் கூடுகள் இருக்கக் கூடும். அவைகளைச் சுற்றி கழுகுகள் வட்டமிடலாம். நரிகளின் ஊளை கேட்கலாம். ஆனால் நாம் பாதையை தவறவிடோம். பிணமும், பிறவும், நமக்கு முன்னால் வீரர்கள் சென்றிருக்கிறார்கள என்பதின் சின்னங்கள் என்றே கருதி நடப்போம். இடையிலே வரும் பிரச்சினைகளுக்காக, நாம் எதற்காக உருவாகி, உழைத்து வருகிறோமோ, அந்த அடிப்படை இலட்சியத்தை இழந்து விடமாட்டோம். திராவிட நாட்டுப் பிரிவினையை மறப்பவன் திராவிடனல்ல!

நான் சுனதனவான்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல—பணத்தால் உயர்ந்தவனல்ல—உங்களைவிட செல்வத்திலே குறைந்தவன்—திறமையிலே குறைந்தவன் இவைகளையெல்லாம்விட தைரியத்திலே மிக மிகக் குறைந்தவன்—ஆனால் என்னைச் சூழ்ந்திருக்கும் தம்பிமார்களின் தைரியத்தை நம்பித்தான் பணியாற்றுகிறேன். நம் இலட்சியப் பயணத்தில் வெற்றி பெற்றே திருவோம்—இது உறுதி!

அடுத்த மாநில மாநாட்டிலே, திராவிடநாடுப் பிரச்சினையை அறிந்து வர வடநாடு ஏகாதிபத்தியம் அனுப்பும் தூதுக்குழு ஒன்று இங்கே அமர்ந்திருக்கும். அத்தகைய முறையில் வரும் ஆண்டுகளில் பணியாற்றுவோம். நமக்கு இடையிலே ஏற்படும் சபலங்களை விரட்டிடும் துணிவு மட்டும் வந்து விட்டால் நாம் நிச்சயம் வெற்றியடைவோம்.

சட்டசபை அலங்காரமானது. எம். எல். ஏ. பதவி இலாபகரமானது—மந்திரிப் பதவி மயக்கந் தரக்கூடியது. ஆனால் அவை நமது இலட்சியத்தை இன்று இழக்கச் செய்யும்! நாணயத்தைப் போக்கி விடும்!! நாம் அரசாங்க மண்டபங்களிலே கூடவில்லை—ஆலமரத்தடியிலே கூடுகிறோம். திராவிடத்தின் திக்கெட்டிலும், கடலைத் தாண்டியும் நம் கழகக் கிளைகள் உள்ளன, இலங்கையிலே, பர்மாவிலே, இந்தோ சீனாவிலே கிளைகள் இருக்கின்றன. அங்குள்ள தோழர்கள்

[illegible]

யும் பூர்த்தி செய்வோம் விரைவில்! போனவாரம், என்னை சந்தித்த ஜீவா சொன்னார், "இந்தத் தேர்தலில் நீங்கள் யாரை ஆதரித்தாலும் சரி, அதற்குப் பிறகும் நாம் ஒன்றாக இருக்கவே பாடுபடுவேன்" என்று. நானும் அதையேதான் சொல்கிறேன். ஜனவரி பேச்சென்றால், ஒப்பந்தத்தில் கையெழுத்திடு என்பேன். மார்ச்சிலே பேசுவோம். மனம் ஒன்றுபட்டு மக்கள் பணி செய்வோம் என்கிறேன்.

இதுவரை, திராவிட முன்னேற்றக்கழக ஒப்பந்த பத்திரத்தில் 150 பேர்களுக்கு மேல் கையொப்பமிட்டிருக்கிறார்கள். அவர்களிலே முதலாளிமார்கள் உண்டு—ஒரு அய்யர் கூட இருக்கிறார்! இவர்களைப் பார்க்கிற பொழுது கொஞ்சம் சந்தேகம். அரசியல் விராடபர்வமோ இது, மறைந்திருந்து வருகிறார்களோ—வந்து மொல்லைதா நினைக்கிறார்களோ என்றெல்லாம்! இந்த சந்தேகத்திற்கிடையே தம்தம் கட்சிக் கொள்கைகளைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அதற்காகத்தான் அவர்களை எடைபோடுவோம்—சலித்து எடுப்போம்—உரைத்துப் பார்ப்போம்—கூர்மையாகக் கவனித்து நல்லது அல்லாதன இருந்தால் அனுதாபத்தோடு ஒதுக்கிடுவோம்.

காங்கிரஸ் ஆட்சி மீண்டும் வாராமலிருக்க பாடுபட வேண்டும். தமிழ்நாட்டு ராஷ்டிரபதி காமராஜர் அடிக்கடி கூறுகிறார், சுதந்திரம் நாலாண்டுக் குழந்தை—அதனிடம் அதிகம் எதிர்பார்க்கிறார்கள் என்று! அது எதைச் செய்தாலும் பொறுத்திடுக, ஓட்டை மட்டும் போட்டிடுக என்று பல்லவி பாடுகிறார்! அந்த நாலாண்டுக் குழந்தைதான், சேலம் சிறையிலே கிடந்த நிரபராதிகளான காவல் கைதிகளை சுட்டு வீழ்த்திற்று, நெசவாளிகளை வாட்டி வதைத்தது, மக்களை பட்டினி போட்டது—சென்னை வீதியில் அறிஞர் அப்பாதுரையை அடித்துப் போட்டது—தாய்மார்களைக் கூட கடிகொண்டு தாக்கியது. பெரியாரையும், என்னையும்சிறைவைத்து பத்துநாட்கள் அரசியல் கொலு பார்த்தது—இன்னும் தாங்கமுடியாத கொடுமைகளையெல்லாம் செய்தது நாலாண்டுக் குழந்தை. நாலாண்டுக காலத்திலேயே இவைகளையெல்லாம் செய்கிறதே, இன்னும் மீசை அரும்பி, கையில் கம்புடன் வந்தால் என்ன நடக்கும் என்று எண்ணிப் பார்க்கும் பொழுது பயமல்லவா தோன்றும்! பாரதத்தில், வருகிறதே—கண்ணன் சின்ன வயதில் வெண்ணையைத் திருடினான். தாய் யசோதா, அவனை அடித்து அடக்காமல், உச்சிமோந்து, முத்தமிட்டு, கண்ணே, வெண்ணெய் தானே வேண்டும், வெளியில் ஏன் போகிறாய், நம் வீட்டிலேயே இருக்கிறது என்று கொஞ்சிப்பேசி, வெண்ணெய் படிந்த வாயைத் துடைத்து, கண்ணனைத் தட்டிக்கொடுத்தாள். அதன் விளைவு என்ன வாயிற்று? சிறுவயதிலேயே, திருடாதே என்று தடுக்காததால்பெரிய வயதில் சேலையையே திருட ஆரம்பித்துவிட்டான்! அதைப்போலத்தான் காங்கிரஸ் ஆட்சியை, நாலாண்டுகாலத்தில்நடத்தியசெயல்கள் சகிக்கவில்லை, தலையில் கொட்டி வெளியேற்ற நினைக்கிறார்கள் மக்கள்.

நாலாண்டு காலத்தில் காங்கிரஸ் சாதித்தது என்ன? அரிசியிருந்த பாண்டத்தில் சோளம், சோளமிருந்த பாண்டத்திலே புளியங்கொட்டை, புளியங்கொட்டை இருந்த பாண்டத்திலே பருத்திக்கொட்டை—பருத்திக்கொட்டையும் போய் காலி பாண்டங்கள்—இடிந்த கூரை—செத்துவிழும் மக்கள்—பசி, பட்டினி இவைகளைத் தானே காட்டிட முடியும்!

மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் நேரு சர்க்காரை நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். நேரு சர்க்கார் முதலாளிகளின் பின்னேடும் சர்க்கார் என்கிறேன். அமெரிக்க முதலாளித்துவத்தின் அடிவருடும் ஏஜண்ட் சர்க்கார் என்கிறேன். நேருவைக் குற்றம் சாட்டுகிறாயே, நேரு எங்கே, நீ எங்கே என்பர் சிலர். நேரு மிகப் பெரியவர்—தெரியும் எனக்கு. எவ்வளவு பெரியவராக்கப்பட்டிருக்கிறார் என்பதும் தெரியும். ஆம், நான் சாமான்யன். நான் எவ்வளவுதூரம் சாமான்யனாக்கப்பட்டிக்கிறேன, இந்த நாட்டுப் பத்திரிகைகளால் என்பதையும் உணர்கிறேன். இருந்தாலும் குற்றம் சாட்டுகிறேன்.

நேரு சர்க்கார், தொழில்களை தேசிய மயமாக்குவதாக உறுதி தந்தார்கள். ஆனால் செய்யவில்லை-செய்ய முடியவில்லையே என்றே கூறினார்கள். நிர்வாகத் திறமைக் குறைவை வெளிப்படுத்தினார்கள். ஏன் இந்த சர்க்கார் சர். ஆர். கே. சண்முகம், ஜி. டி. நாயுடு போன்றவர்களை சர்க்கார் ஊழியராக்கக்கூடாது? மற்றவர்களைக் குறிப்பிடாமல் இவர்களை ஏன் குறிப்பிடுகிறேனென்றால் இவர்கள் என் நண்பர்கள். நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதால்! சென்னை மாகாண மோட்டார் போக்குவரத்தை தோழர் ஜி. டி. நாயுடுவை அழைத்து அவரையே ஜெனரல் மேனேஜராக இருந்து நடத்தச்சொல்லுங்கள். லாபம் வராவிட்டால், அவர்களாக நடத்தும் பொழுதுமட்டும் எப்படி லாபம் வந்தது என்று கேளுங்கள். தவறாக நடந்து கொண்டார்கள் என்றால், மக்கள் மன்றத்திற்கு அழைத்து வாருங்கள். அவர்களை தேசத் துரோகிகள் என்று தீர்ப்பளியுங்கள். இவர்களை என்னசெய்வதென்று கேளுங்கள். பிரஞ்சுப் புரட்சிக்கதைகள் மனதில் உருண்டு உருண்டு வரும். இவர்களை அழைத்துவர, முதலாளிமார்களின் கொடுமைகளிலே வெந்துழலும் தொழிலாளிகள் தயாராகஇருக்கிறார்கள்.

கள்ள மார்க்கட்காரர்களைக் கழுமரத்திலேற்றுவேன் என்றார் நேரு. நாடு முழுவதும் சுற்றி வந்து, இதையே கூறினார். அதன் பிறகு அமெரிக்கா சென்றார். அமெரிக்கா செல்லுமுன் கள்ள மார்க்கட்காரர்களிடம் கெஞ்சினார். கள்ள மார்க்கட்காரர் என்றுகூட கூறவில்லை. 'இரகசிய இலாபக்காரர்களே, கணக்கு காட்டவேண்டாம், உங்கள் இலாபத்தில் ஒரு பகுதியை வரியாக செலுத்தி விடுங்கள்—எப்படிக் கிடைத்தது இலாபம், என்னவிதத்தில் வந்து சேர்ந்தது, எதையும் சொல்லவேண்டாம்' என்றார் நேரு.

வல்லரசுகளின் எழுச்சியும், வீழ்ச்சியும் என்பதுபற்றி தம்பி சம்பத் பேசக் கேட்டீர்கள். இன்று நேருவின் எழுச்சியும் வீழ்ச்சியும் நம் கண்களுக்கு முன்னால் தெரிகிறது. அபேதவாதம் படித்த அலகாபாத் பண்டிதர், ரஷ்ய திட்டத்தை பெய்சிபூர் காங்கிரசில் பேசியவர், விடுதலைப் போரின் முன்னணி வீரர், சுதந்திர புருடர், இந்தியாவின் முடிசூடா மன்னர், மாசிலா மாணிக்கம், ஆசியாவின் ஜோதி, அகில உலகும் அறிந்த அறிஞர்—நேரு, இன்று மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார். நம்பிக்கையை இழந்த நேருவின் கையிலே ஆட்சி செல்வதைவிட, டாடாவிடம் ஒப்படைக்கலாம். அயோக்கியத்தனம் அதிகம் இருந்தாலும், திறமையோடாவது ஆட்சி நடக்கும். பிர்லாவிடமே ஆட்சியை தரலாம். பேராசை இருந்தாலும், பிற நாட்டான் கேலி செய்யாத நிலையிலாவது ஆட்சி இருக்கும். நேருவின் கரத்திலே மீண்டும் ஆட்சியை ஒப்படைப்பது, கன்றை ஓநாயிடம் ஒப்படைப்பதாகும். ஆகவே, இந்தத் தேர்தலில் காங்கிரசை தோற்கடிக்க எல்லா வகையான—மன்னிக்கவேண்டும்—சட்ட பூர்வமான—மன்னிக்கவேண்டும்—நாகரீகமான நடவடிக்கைகளிலும் தி. மு. க. ஈடுபடும்.

சிறைச்சாலை சென்று வந்து 'சட்டசபை' போனவர்கள் அவர்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டால் சி. ஐ. டி.க்களுக்கு வேலையிருக்காது என்று கூறினார்கள். ஆனால், இப்பொழுது வேலைக்கு மேலே, வித விதமாக சி.ஐ.டிக்கள் வருகிறார்கள். எங்கே தவறுகிறோம், வழக்கு தொடுக்கலாம், சிறையில் தள்ளலாம் என்று பார்க்கிறார்கள். அந்த சி. ஐ. டி.க்களில் பலர் எனக்கு நண்பர்கள். அவர்கள் உத்தியோகம் நிலைக்கவேண்டுமென்பதற்காக பெயர்களைக் கூறவில்லை. சி. ஐ. டி.க்களை ஏன் பின் அனுப்பலாம். நான் காங்கிரசாட்சியை சந்தேகிக்கிறவன். ஆகவே, அவர்கள் என்னைச் சந்தேகிக்கலாம். ஆனால் கிருபளானி பின்னால் ஏன் அனுப்ப வேண்டும்? அவர் அவர்களிடமிருந்து நேற்று பிரிந்து வந்தவராயிற்றே!

யானை அளவு இந்தியா—பூனையளவுதான் இலங்கை. ஆனால், யானை பூனையிடம் பிச்சை கேட்கிறது! இந்தியாவிற்கு இலங்கை அரிசி அனுப்புகிறது. எப்படி முடிகிறது? அதுதான் வெட்கக் கேடு. இந்தியாவில் விளையும் அரிசியையே, கள்ள வாணிபர்கள் வேதாரண்யம், கோடிக்கரை வழியாக சிலோன் கடற்கரைக்குக் கொண்டுபோகிறார்கள். அந்த அரிசியே மீண்டும் இந்தியாவிற்கு வருகிறது! அதனால்தான் சேனநாயகா செருக்குடன் இருக்கிறார். இதைக் காட்டிலும், இந்தக் காங்கிரசாட்சியினர். ஆளத் தெரியாதவர்கள் என்பதற்கு அத்தாட்சி வேறு வேண்டுமா?

இன்று ஆளும் காங்கிரசாட்சி பாசிசப் பாதையில் நடந்து செல்கிறது. அடக்குமுறைகள் அத்தனையும் அவிழ்த்துவிட்டு வேடிக்கை பார்க்கிறது.

நேருவோ, ஒரு மாதம் இங்கிலாந்து செல்கிறார், மௌண்ட்பேட்டன் மாளிகையில் தங்குகிறார். அடுத்த மாதம் அமெரிக்கா செல்கிறார், ட்ரூமன் வரவேற்கிறார், என்றெல்லாம் பேசுகிறார்கள். ரோம் நாட்டு வீரர்கள், உள் நாட்டிலே செல்வாக்கு சரியும்போது, வெளிநாடு சென்று ராணுவ வெற்றி பெற்று ரோம் நகரில் பவனி வந்து, சரிந்த செல்வாக்கை சரிகட்டியதாக சரிதம் கூறுகிறது. நேரு இதே முறையில் பழகுகிறார். ஜூலியஸ் ஸீஸரைப்போல, நேரு இன்று இருக்கிறார்!

அப்படியே நேரு அகில உலகப் புகழ்பெற்றவர் என்றாலும், வெளிநாட்டுக் கொள்கையிலாவது, வலுவான கொள்கை கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை! அமெரிக்கா எப்படி ஆடுகிறதோ அப்படி ஆடுகிறார்கள். கொரியா யுத்தத்தில் இவர்கள் ஏன் கலந்துகொள்ள வேண்டும்? படை யனுப்பவில்லை யென்பார்கள். வைத்திய யூனிட்டுகள் ஏன் அனுப்பவேண்டும்? 38 வது ரேகையைத் தாண்டினால் கண்டிப்பேன் என்று முழங்கினார் நேரு. ஆனால் அவர் அலகாபாத்திலிருந்து அமிர்தசரஸ், அமிர்தசரஸிலிருந்து பூனா, பூனாவிலிருந்து பம்பாய் என்று இப்படித் தாண்டிக்கொண்டிருந்தாரே தவிர, கண்டிக்கவில்லை! ஈரான் நாட்டு முஸாதிக், முதுகிழவர் போராடுகிறார்—எண்ணெய் பிரச்சினைபற்றி நல்லெண்ணம் பிறக்கும்படி நேரு ஏன் பேசக்கூடாது? சூயஸ் காலவாய்பற்றி அவர் ஏன் சொல்லக்கூடாது? நேரு, இவை பற்றி ஒரு நல்ல வார்த்தை சொன்னாரா? இனியாவது சொல்வாரா?

ஒரு நாடு, வெளிநாட்டில் பிச்சைக் கிண்ணத்தை ஏந்தி நின்றால் வெளிநாட்டில் சுதந்திரக் கொள்கையோடு உலவ முடியாது என்றார் மறைந்த மாவீரர் லியாகத் அலிகான். அமெரிக்காவிடம் சோளமை பிச்சை நடத்தும் இந்தியா எப்படி தலைநிமிர்ந்து நிற்கமுடியும்? பாகிஸ்தான் பிரதமர் உண்மையைக் குறிப்பிட்டார். ஆம், அந்த உண்மையை உணர்ந்திருந்ததால்தான் சாகிற நேரத்திலும் முஷ்டியைக் காட்ட முடிந்தது அவரால்.

ஆகவே, ஆளுந் திறமையற்ற இவர்கள் பிடியில் திராவிடம் இருக்கக்கூடாது என்கிறோம். ஆனால் அவர்கள் திராவிட நாடு பிரிகிற வரையிலே எதிர்ப்பார்கள். பிரிவினைத் திட்டத்தில் கையெழுத்திடும் கடைசி நேரம்வரை திட்டுவார்கள். பாகிஸ்தானா, அது பாதகம்தான் என்றனர். குழந்தையை வெட்டுவதா? கோஹத்தி செய்வதா? ஸ்திரிஹத்தி பொல்லாது என்றெல்லாம் பேசினர். பாகிஸ்தான் பிரிவினை கோரியபோது ஆச்சாரியார்தான் இத்தகைய சிசுஹத்தி, ஸ்திரிஹத்தி, கோஹத்தி யெல்லாம் பேசி எதிர்த்தார். ஏனெனில் அவைகளைப் பேசிப் பேசிப் பழக்கப்பட்ட பரம்பரையைச் சேர்ந்தவராதலால்! அவரேதான், மேல்வேட்டியில் துவாரம் ஏற்பட்டுவிட்டால் இரண்டாகப் பிரித்து விடுவது புத்திசாலிகளுக்கு அழகு—துணிக்கு துணியும் கெடாது, இரண்டாகவும் ஆகும் என்று கதை கூறினார், பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவாக! ஆகவே, எதிர்க்கிற இவர்கள் நாளை ஆதரிப்பார்கள் என்பது தெரியும். கம்யூனிஸ்டுகள் கூட பாகிஸ்தானை கடைசிவரையில் ஏற்கவில்லை. ஏற்பட்ட பிறகு, சுயநிர்ணய அடிப்படையில் அது சரியாகி விட்டது. என்று கூறினர்! அவர்கள் இன்று எதிர்க்கிறார்களே என்று ஆயாசம் வேண்டாம். நாளைக்கு ஆதரிக்கப் போகிறார்கள் என்ற நம்பிக்கையோடு பணியாற்றுங்கள். அதுதான் மனித இயற்கை—மனித சுபாவம் என்பதை உணர்ந்து முயற்சியை விடாமல், மேலும் உற்சாகத்தோடு பணியாற்றுங்கள்.

பாகிஸ்தானே சிறியநாடு என்றார்கள். அதிலேயே பக்டூனிஸ்தான் என்று பிரிவினை கேட்கிறார்கள் பட்டாணியர்கள் உறையிலே வாளையிடாதவர்கள், ஆகவே அவர்கள் கோரிக்கை சரியானது என்று 'கல்கி' படம் போட்டு பாடம் போதிக்கிறது. பர்மாவின் ஒரு ஓரத்திலே இருக்கிறார்கள் கரேனியர்கள். அவர்கள் தனிநாடு கேட்கிறார்கள். ஸ்காட்லாந்திலேகூட கிளர்ச்சியிருக்கிறது. பாலஸ்தீனம் மணற்காடு—அதிலே கூட தனி நாட்டுணர்ச்சி சர்வதேச மன்றத்தார் தலையிட்டு பிரித்தனர். அல்பேனியா பிரிந்து வாழவில்லையா? ஸ்பெயினில் சிறு பகுதி போர்ச்சுகல்—அதன் சரித்திரமும் வேடிக்கையானது. ஸ்பெயின் மன்னன் தன்வைப்பாட்டிக்குத் தானமாக தந்தநாடு அது. அதுகூடத் தனித்திருக்கிறது. ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையிலே கடலா இருக்[கிறது]—

8-ம் பக்கம் பார்க்க

கம்யூனிஸ்டு தலைவர்களை விடுதலை செய்

அரசியல் நேர்மை வளரட்டும்

அடக்குமுறைக்கு எச்சரிக்கை

"சுட்டுத்தள்ளு!"

"காரணம்?"

"அவன் ஓர் கம்யூனிஸ்டு!

"இவனைப் பிடித்துப்போடு"

"ஏன்?"

"கம்யூனிஸ்டுத் தொண்டனும்!

* * *

காங்கிரஸ் சர்க்கார், கம்யூனிஸ்டுத் தோழர்கள் மீது வீசும், அடக்குமுறைகளை அப்போதைக்கப்போது, கண்டித்து வந்திருக்கிறோம். காரணமில்லாமல் அவர்களைக் கைது செய்தபோதும், சிறைக்குள்ளே பூட்டி சித்திரவதை செய்தபோதும், தி. மு. க. வின் கண்டனக்குரல்கள் எழுப்பத் தவறியதில்லை. "விசாரணையின்றி சிறையில் பூட்டிவைக்காதே!"—என்று நமது ஏடுகள், எழுதியவண்ணமே இருந்தன. சர்க்காரின் கொடுங்கோலாட்சியைக் கண்டித்து, நாடெங்கும் முழக்கமிட்டோம். நமது மாநாடுகளிலே, கூட்டங்களிலே, வலியுறுத்தியே வருகிறோம்.

களப்பால் குப்பு சிறையிலே பிணமானபோது, பட்டுக்கோட்டை இரண்யன் சுட்டுத் தள்ளப்பட்டபோது, தஞ்சைத் தரணியிலே ஏழைகள் குடிசைகளை எதேச்சாதிகாரச் சர்க்கார் இடித்துத் தள்ளியபோது, மணலி கந்தசாமியின் இல்லக் கதவுகளைத் தகர்த்து தொல்லைகள் தந்தபோது, சேலம் சிறையிலே நாட்டின் கண்மணிகளாம் 22–வாலிபர்களை சுட்டுத் தள்ளியபோது, தெலிங்கானா அட்டூழியங்களைக் கண்டபோது—நாம் சொரிந்த கண்ணீர், அடைந்த ஆத்திரம், எழுப்பிய கண்டனம் ஏராளம். நாடெங்கும், தி. மு. க. வின் பிரச்சாரகர்கள், சகோதரக் கட்சியொன்றை சர்வாதிகார வெறியர்கள் சின்னாபின்னமாக்குவதைத் தங்கள் புயல் குரலில், கண்டித்தார்கள்.

கம்யூனிஸ்டுத் தோழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், அநீதி நிரம்பியவை. அக்கிரமம்! ஒரு அரசியல் கட்சியை அடக்க விடோம்! பாசிசம் வளர அனுமதியோம்! என நமது பாசறை, முரசொலி எழுப்பிற்று. ஜனநாயக மணம் வீசவேண்டும், தர்பார் ஆட்சி நெடுங்காலம் நீடிக்காது, என்று ஆட்சியாளரை பன்முறை எச்சரித்தது—கைது செய்யப்பட்டோரை, விடுதலை செய், என்று வலியுறுத்தியிருக்கிறது!

ஆனால் கொடுங்கோலேந்திகளாகி விட்ட காங்கிரசார் பற்பல காரணங்கள் காட்டி, கம்யூனிஸ்டுத் தோழர்களை, விடுவிக்க தாமதித்தே வந்தனர்.

பொதுத் தேர்தல் நெருங்கியதும், மக்கள்முன் தாங்கள் புனிதமுடையோர்போல நடிக்க விரும்பி, சிலரை சிறைக்கு வெளியே அனுப்பியும், சிலரை பரோலில் விடுவித்தும், உத்திரவுகள் பிறப்பித்தனர்.

ஆனால், விடுதலையாகாமல் இன்னும் சிறைகளிலே அவதிப்படுவோர், ஆயிரமாயிரம். அவர்களிலும் பலர், விசாரணை செய்யப்படாமலே, அடைபட்டுக் கிடக்கின்றனர்.

இது. மகா கொடுமை! எந்த அரசியல் பூமியிலும் நடக்காத கொடுமை!!

ஆகவே, உடனடியாக எல்லா, கம்யூனிஸ்டுத் தலைவர்களையும் விடுவிக்கவேண்டும் — இந்த சர்க்கார். மதோன்மத்த போக்கையே கடைப்பிடித்து வாழ நினைப்பது, கேடுபயக்கும்.

இந்த வேண்டுகோளையும் எச்சரிக்கையையும், அரசியல் நேர்மை விரும்பும், தி. மு. க. தனது மாநில மாநாட்டில் வெளியிட்டது. தி. மு. க. பொதுச் செயலாளரும் தனது உரையில் இதை வலியுறுத்தினர்.

இது சம்பந்தமாக தி. மு. க. மாநில மாநாடு நிறைவேற்றிய தீர்மானம்.

20. பாசீச முறையில், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் பலரை, விசாரணையின்றிக் காவல் கைதிகளாக இன்னும் வைத்திருக்கும் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், உடனடியாக அவர்களை விடுதலை செய்து ஜனநாயகப் பண்பை வளர்க்கவேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

நல்லாட்சி நிலவ, இத்தீர்மானப்படி, சர்க்கார் நடக்கவேண்டுமென வலியுறுத்துகிறோம் ஒழிக அடக்குமுறை! வளர்க மனிதாபிமானம்!!

★

சிற்றரசு நூல்கள்

உலகைத் திருத்திய உத்தமர்களின் வாழ்க்கையை அறியும் ஆவல், அதிகமாக அரும்பியுள்ளது புதுமை விரும்பிகளுக்கு. அந்த ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் நமது சி. பி. சிற்றரசு அவர்கள் முன்வந்துள்ளார்—திருச்சி, தமிழ் மன்றத்தார் மூலமாக. அவருக்கென அமைந்த புயல் வேக நடையில், புதைந்து கிடக்கும் மாணிக்கங்களை, மெருகிட்டு தமிழுலகுக்குப் படைத்துள்ளார், மார்டின் லூதர், சாய்ந்த கோபுரம், விஷக் கோப்பை, வெங்கலச்சிலை ஆகிய நூல்களின் மூலம். பழைமைத்திரையைக் கிழிக்கமுயன்ற வெற்றி வீரர்களான மார்டின்லூதர், மாஜினி, சாக்ரடீஸ், லெனின் ஆகியோரைப் பற்றிய, அரிய நூல்கள் இவை—கவர்ச்சிகரமாக பதிப்பிக்கப்பட்டுள்ளன. நண்பர் அவர்களின் முயற்சியைப் பாராட்டுகிறோம். பதிப்பகத்தாரின் ஊக்கத்தை வாழ்த்துகிறோம். புது உலக வாலிபர்கள் இந்த விருந்துகளை சுவைக்க வேண்டும்—உலக உத்தமர்களை அறிய அவர்தம் பெருமையைச் சொல்ல கிடைக்குமிடம்:- தமிழ் மன்றம், தெப்பக்குளம், திருச்சி.

9-ம் பக்கத் தொடர்ச்சி

உடையின்றி, இருக்க இல்லமின்றி படுக்கப் பாயின்றி கனிகளையும், கிழங்குகளைத் தின்றும் மரப்பட்டைகளையும் உடுத்தியும் மணல் மேடுகளில், மரத்தடியில் படுத்துறங்கினதாக ராமாயணக் கதை சொல்கிறது. ராம ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற காங்கிரஸ் சர்க்காரும் ராமனும் சீதையும் காட்டில் வாழ்ந்த கஷ்ட நிலையைப்போல இந்த 4 வருட ஆட்சியில், நாட்டில் வாழும் மக்களுக்குக் கஷ்ட நிலையைக் கொண்டுவந்துவிட்டுவிட்டார்கள். இதனை நாம்தான் மாற்றவேண்டும்.

* * *

திராவிடநாடு பிரிவினைத் திட்டம் வேலூரில் கூடிய தமிழர் மாநாட்டில் மறைந்த மாவீரர் சர். ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களால் தரப்பட்டு பெரியார் அவர்களால் வளர்க்கப்பட்டு நம் அண்ணா அவர்களின் அறப்போர் திட்டங்களால் அடையப்போகும் திட்டமாகும். நம் திராவிட நாட்டை அடைந்து வாழ்வது இல்லையேல் பிரிவினை அறப்போரில் மாள்வது என்ற முடிவில் நம் எதிர்காலம் இருக்கிறது என்பதை எண்ணி தொண்டு புரிய வேண்டும்.

இத்தகைய அரிய ஆசைகளை வெளியிட்டார் — பிறகு மாநாட்டைத் திறந்துவைத்தார்—வெற்றிப் பாதையிலே நம்மைக்கொண்டு சேர்த்தார்.

❁

'காலனி' ஆதிக்கம் ஒழிக!

பிரெஞ்சு—போர்ச்சு : : சர்க்காருக்கு அறைகூவல்

சுதந்திர வேட்கை, அணையாத ஜோதி!—இந்த உண்மையை இருபதாம் நூற்றாண்டு தெளிவுபடுத்திவிட்டது. எனினும், சுதந்திரதாகத்தை அடக்கி, தத்தமது ஆதிபத்யத்தை நீட்டி வாழலாம் என, இன்னுஞ் சில வல்லரசுகள் கனவு காண்கின்றன. பலமும், ராஜ தந்திரமும் மிக்க பிரிட்டிஷ் மகுடமே விடுதலை தாகத்தை மதித்து, இந்திய உபகண்டத்தை விட்டு வெளியேறிவிட்டது. ஆனால் உலர்ந்த சருகுபோல், உலக வல்லரசுகளுக்குள் ஒன்றுசுக்கிடக்கும் பிரான்சும், சிறுநாடு போர்ச்சுகலும் ஆதிபத்திய வெறியை அணைத்து மகிழ விரும்புகின்றனர்.

அந்த பேராசையின் காரணமாக இந்தியத் துணைக்கண்டத்தின் சின்னஞ் சிறு பிரதேசங்களை விட்டு வெளியேறாமல் அங்கெல்லாம் ஆணவத்தோடு நடமாடுகின்றனர்.

புதுவை, காரைக்கால், மாகி, கோவா போன்ற பிரதேசங்கள் இன்னும் அந்நியப் பிடியிலேயே சிக்கி அவதிப்படுகின்றன. அங்குள்ளோர், விடுதலை முரசு கொட்டினாலும், அதை அடக்கு முறைகளால் ஒடுக்கி விட முனைகிறது, பிரெஞ்சு—போர்த்துகீசிய ஆதிபத்ய அரசுகள்.

18ம் நூற்றாண்டில், ஐரோப்பிய வியாபாரிகள், இந்த உபகண்டத்துக்குள் நுழைந்த வகையையும், தங்களுக்குத் தேவையான உற்பத்திப்பொருள்கள் குவிந்திருப்பதைக் கண்டு, அவைகளை நிரந்தரமாக அனுபவிக்க, இந் நாட்டை அடிமை கொண்டதையும், உலகம் அறியும்.

தங்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தரும் நாடுகளை, பீரங்கியாலும், ராஜ தந்திரத்தாலும் அடிமை கொண்டனர். தங்களது தாய் நாடு வாழ, பல நாடுகளில் குடியேறி, அங்கங்கே கோலோச்சி வாழ்ந்தவர்களை வீழ்த்தி, தத்தமது ஆதிபத்தியங்களை அமைத்தனர்.

ஆனால், இப்போது! அடிமையாகிக் கிடந்த நாடுகள், விடுதலை முரசு கொட்டி, சுதந்திரம் பெற்றுவிட்டன — இரண்டாவது உலகப் போரின் விளைவாக, ஐரோப்பிய வல்லரசுகளுக்கு அடிமையாகிக் கிடந்த இந்தியா; பாகிஸ்தான், இலங்கை, பர்மா, இந்தோனேஷியா முதலிய நாடுகளைவிட்டு, ஆதிபத்திய அரசுகள், ஓடும்படியாயிற்று.

இந்த உண்மையை அறிந்தும் பிரெஞ்சு போர்த்துகீசிய அரசுகள் இந்தியப் பிரதேசங்களை இன்னும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களிலிருந்து தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை அடைவது அல்ல அந்த ஆதிபத்திய அரசுகளின் நோக்கம்.

ஏனெனில், இந்தச் சிறு சிறு பிரதேசங்கள் அந்த அளவுக்கு வளமும் வசதியும் நிரம்பியவை அல்ல.

இருந்தும் பிரான்சு, போர்த்துகீசிய சர்க்கார்கள், இந்தப்பிரதேசங்களை விட்டுச் செல்ல விரும்பவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

"போர்வாள்"

மாநில மாநாட்டு மலர்

* 27—12—51 வியாழனன்று வெளிவருகிறது.
* சி. என். ஏ. வின் தலைமையுரை—முழு விவரம்
* திறப்பாளர், கண்காட்சித் திறப்பாளர், வரவேற்பாள[ர்] உரைகள்
* சிறப்புச் சொற்பொழிவுகள்
* மாநாட்டு முழு நிகழ்ச்சிகள், தீர்மானங்கள், சட்டதிட்டங்கள்
* மாநாடு பற்றிய ஏராளமான புகைப்படங்கள், எல்லாம் நிறைந்தது இரு நிற ஆர்ட் அட்டையுடன் கூடியது

விலை அணா எட்டு

★ கலைக் கண்காட்சி ஒரு புரட்சி ★

படங்களே பகுத்தறிவு பிரசாரகர்கள்

சித்திரபுரியில் சிற்றரசு

ஓவியக் காட்சி சாலை ஒரு தனி நகரமாகவே விளங்கியது. அத க்கான ஆண்களும் பெண்களும் ிசை கலையாது வந்து காட்சியே ன்போர் கண்களுக்கு விருந்து!

உள்ளே நுழைந்துவிட்டாலோ, யச் சுரங்கம்—எந்தப்பக்கந்திரும் லும் எழில் கொழிக்கும் சித்தி கள் — எனினும் அவைகளில் ட்சி எண்ணங்கள் நிறைந்து வழி ! அவை கண்களின் வழியே ந்து, சிந்தனைக்கு தேன் பாய்ச் கொண்டிருந்தன.

அந்தக்கலை நகரம் மிகப்பெரியது று கூறுதார் இல்லை. அதனைச் றிப் பார்க்கவே, இரண்டு மணி மாகிறதென்று கூறிக் ண்டே தோழர்கள்வந்தவண்ண ந்ததைக் காணும் பொழுது ே மகிழ்ச்சி — முதல் முயற்சி என்றெண்ணினோம். அதுவே கையை வெற்றியைத் தந்துவிட் து என்ற எண்ணத்தால்!

நான்கு தினங்களிலும் அங்கு ற 'க்யூ' வரிசை குறைந்ததே லை. இருந்தும் இருபத்தையா ம் பேரே பார்க்க முடிந்தது ருல், அந்த ஓவிய பூமியின் ப்பு மிகப்பெரியது என்று கூறு ல தெரியும்.

அந்த சித்திரபுரியின் சிங்காரங் , அதனைத் திறந்து வைத்த ழர் சி. பி. சிற்றரசு அழகாக க்கக் கூறினர்:

'சிந்தனையைத் தூண்டி செயலுக் கொண்டுபோன சீர்திருத்த ம்மல்களின் ஓவியங்கள், அவர் மேலான கருத்துக்கள்—மனித க்கத்தின் மானத்தைக்காத்த தாபிமானிகள், அவர்தம் எழுத் குவியல்கள்—எட்டமுடியாத காதனத்தை தட்டிப்பறித்து களை மன்னர்களாக்கிய மறக்குல ர்கள், அவர்தம் அரிய முயற்சி —திசை தப்பிப் போய்க்கொண் ந்த சமுதாய தோணியை தம் ர் கைகளால் தடுத்து நிறுத்தி வழி காட்டிய விவேகிகள்— ஞ்சமரில் அஞ்சாது போர் ிக்க பஞ்சைகளையும், பராரி யும் அஞ்சாத வீரர்களாக்கிய ிவார்கள்—நாதியற்ற மனித க்கத்துக்கு நீதியை வழங்கிய மையாளர்கள், சொல்லின் உண் யான தத்துவத்தை அறியாமல் மை அறிமேதைகளென நம்பட் அடித்துக்கொண்டிருந்த தகிடு தக்காரர்களின் உண்மை உரு தைப் படம் பிடித்துக்காட்டி ர்க்கவாதிகள் ஆண்டவனன்றி அணுவும் அசையாதுஎன்றிருந்த தகால ஏற்பாட்டை தம் அறி றலால் தலை கிழாக்கி மனமுயை றை, மதியை, மண்டலத்தை கை, உடுக்கைகளை, கடலை, காற் கனத்தை நீராவியின் சக்தியை தின் அடிவாரத்தை நீர்வீழ்ச்சி த் தான் ஆற்றலுக்குள்ளடக்கி வகளைத் தன்னிஷ்டம்போல த்துத் தனக்கும் உலகுக்கும் வயான வசதிகளையும் பெற் கொண்ட விஞ்ஞானிகள்—ஜன கமென்ற வாளை சன்மார்க்க ற தங்க உறையில்போட்டு ஞ்சகத்தால் ஜெகத்தைப் பயங் டிக்கொண்டிருந்த நீசர்களின் முகமூடியை கிழித்து மக்களுக்கு நன்மார்க்கத்தை போதித்த நல்ல வர்கள் அங்கே உண்டு.

மதம் மனிதனுக்கா, மனிதன் மதத்துக்கா—மதமா, மனிதனா எது முந்தி என்று ஏற்பட்ட போட்டியில் மதத்தால் மனிதன் வாழக் கூடாது, மனிதன் மனிதனாகவே வாழவேண்டும் என்று வெளியிட்ட விவேகிகள் கீழ்நாடுகளுக்குக் கடல் வழி வகுத்துத்தந்த மார்க்க போலோ — புது உலகம் எனும் அமெரிக்க நாட்டைக் கண்டுபிடித்த கொலம்பஸ், மாகடலைக் கடந்த வாஸ்கோடிகாமா ஆகிய அலையாண்ட கடலை அடக்கியாண்ட அஞ்சாத வீரர்கள்.

மூச்சு வேண்டுமா—முத்து வேண்டுமா, எது வேண்டும் என்ற போது, மூச்சு தேவையில்லை முத்து தான் வேண்டும் பேராசையால் அல்ல பெரு முயற்சியைப் பரிசோதிக்க வேண்டும் என்று சொல்லி வாய் மூடுவதற்குள் குபீரென கடலடி வாரத்தில்அம்புபோல்ஓடி, அழகான முத்துக்களைக்கொண்டு வந்த நெஞ்சுரம் பெற்றவர்கள். காதலைக் கடைச் சரக்காக்காமல் கண்ணால் பேசி கருத்தாய் தவழ்ந்து இதயத்தால் தொட்டு, இன்பத் தராசில் தம்மிருவரை நிறைபோட்டுப் பார்த்துக்கொண்ட காதலர்களைக் காட்டி காட்டி, காதல், காதல் இன்றேல் சாதல் என்ற இன்ப மாலை தொடுத்த கலைவாணர்கள்—அகப்பொருள் புறப்பொருள் நுண்பொருள் ஆராய்ச்சிப் பொருள் ஆகியவற்றின் தத்துவங்களை அடுக்கடுக்காக அடுக்கித் தந்து அகில மாளிகையை அழகுபடச் செய்த அறிஞர்கள்—இவர்களின் அழகு ஓவியங்களும், அருமை கருத்துக்களும் அங்கே காணக்கிடக்கும்.

வில்லம்பால் மக்களை வேட்டையாடிய வீணர்களைத் தன் சொல்லம்பால் தாக்கி அடிமைகளின் கண்ணீரைத் துடைத்து கைவிலங்கை உடைத்து அந்த சண்டாளத்தனத்தைச் சவக்குழிக்கனுப்பி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற ஏற்பாட்டை எக்காலத்திலும் யாராலும் எந்த காரணத்தாலும் அழிக்காதிருக்கும் ஏற்பாட்டை சாகாத சாசன மாக்கிய சுதந்திரத் தந்தை—மோசக் கருத்துக்களால் முடங்கிக் கிடந்த மூட மதியினருக்கு முற்போக்குக் கருத்துக்களைக் கட்டிய மூதறிஞர்களின் உருவப் படங்கள், அவர் தம் ஆழ்ந்த சிந்தனைத் தெளிவுகள். எக்காலத்திலும் மாற்ற முடியாதென்று இறுமாப்போடு எக்காளமிட்ட எண்ணத்தைத் தன் எழுத்தூசிகளால் குத்திச் சாய்த்து மனித வர்க்கத்தின் மயானக் காட்டை இனிய சோலையாக்கிய எண்ணற்ற வீரர்களின் வரலாற்று வரிகள், அவர்தம் ரத்தந்தோய்ந்த முகங்கள், கனல் பறக்கும் கண்கள், எழுதுகோல் ஏந்திய கைகள் ஆகிய அவ்வளவும் அழகாயமைந்திருக்கிறது, இந்த கண் காட்சியிலே!

பக்தர்கள் படம் இங்கில்லை. அவர்கள் இந்த பாப உலகில் இருக்க விருப்பமில்லாமல் பறந்து விடக் கூடும்-பரமண்டலத்தில் வாழநினைப்பவர்களையும் பாருலகில் வாழநினைப்பவர்களையும் ஒன்றாக சேர்த்து அவர்களுக்குள் பகையை மூட்டிவிடக் கூடாதே என்ற பரந்த நோக்கத்தாலும், பச்சாதாப எண்ணத்தாலும்.

மரண பரியந்தம் நடந்தாலும் மாளாத் தூரத்தைத் தன் மதியால் மணிக் கணக்கில் போய்ச் சேர்ந்துவிட விசை வண்டியைக் கண்டுபிடித்த விவேகிகளின் உருவப் படங்கள் அவர்தம் சீரிய ஆராய்ச்சி முறைகள் ஆகியவைகள் மாத்திரமல்ல. இன்னும் பலப் பல உண்டு.

இந்த ஓவியக் கண்காட்சி இனி நிலையான பணியாகும். மாநாட்டில் ஓவியக் கண்காட்சியைக் கண்டவர் பலர், எங்கள் ஊருக்கு அனுப்புங்கள் என்று கூறிச் சென்றுள்ளனர்.

பொங்கல் விழாவை யொட்டி, திருவத்திபுரம், காஞ்சீபுரம், ஈரோடு, திருச்சி, குடந்தை இன்னும் பல ஊர்த் தோழர்கள், தங்கள் ஊரில் கண்காட்சி நடத்தவேண்டும் என்று கேட்டுள்ளனர்.

மாநாட்டில், ஓவியக் கண்காட்சியைப் பார்க்க முடியாமல் திரும்பியவர்களோ, ஆத்திரத்தோடு சொல்லிச் சென்றுள்ளனர். — எங்கள் ஊருக்கு வரும்பொழுது, இருக்கும் நாட்களில், காலை, மாலை, வேளை தவறாமல் வந்து பார்க்கிறோம் என்று!

அயல்நாட்டுத்தூதுவராலயங்கள், அவர்கள் நாட்டினைப் பற்றிய குறிப்புகளடங்கிய படங்கள், சித்திரங்களை அனுப்பியிருந்தன. அவைகளையும் மக்கள் கண்டு மகிழ்ந்தனர். இந்தக் காட்சியமைப்புக்குப் பெரிதும் பாடுபட்ட பட்டுக்கோட்டைத் தோழர் சௌரிராசனை நாம் மறக்க முடியாது.

ஓவியக் காட்சி, பகுத்தறிவு பரப்பும் பணியிலே, தலைமை வகிக்கிறது என்பது, மாநில மாநாடு காட்டிவிட்டது. இனி அதனைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டியது நம் கடமை. —

நான்காண்டுகள் வனவாசம்

ராம ராஜ்யத்தின் அலங்கோலம்

திராவிடம் பிரிவது உறுதி

நீலமேகம் திறப்புரை

மாநில மாநாட்டைத் திறந்து வைத்தார், தோழர் கே. கே. நீலமேகம். அவர், தனது இதயத்தில் மலர்ந்த ஆர்வ மலர்களைத் தொடுத்து, மாலையாக்கியிருக்கிறார். அந்த மலர்களில் சில:-

நம் கழகத்தின் அடிப்படை திட்டத்தை தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று பகுதிகளிலும் முள்ள எல்லா ஊர்களிலும் நம் கிளைக் கழகங்களை நிறுவி அதன் மூலம் பொதுமக்களுக்கு விளக்கி பிரச்சாரம் செய்து இந்த மூன்று மொழியாளர்களும் நம் கழகத்தில் இணைக்கப்பட வேண்டும்.

* * *

நம் திட்டங்களை விளக்குவதற்காக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் நான்கு தினசரி பத்திரிகை அவசியம் தேவை. தினசரி பத்திரிகை இல்லாமல் நாட்டுப் பிரிவினைப் போராட்டம் நடத்துவது, ஆயுதங்களுடன் இருப்பவனுடன் ஆயுதமில்லாதவன் நடத்தும் போராட்டத்துக்கு ஒப்பாகும்.

* * *

அடுத்த மாநில மாநாட்டுக்குள் திராவிட நாட்டு எல்லைக்குட்பட்ட இடங்கள் பூராவும் சிற்றூர்கள் உட்பட எல்லா ஊர்களிலும் நம் கிளைக் கழகங்கள் பல்லாயிரக்கணக்கில் நிறுவி, அவைகள்மூலம் நாட்டுப் பிரிவினை திட்டங்களையும் சமூக சீர்திருத்த திட்டங்களையும் பட்டி தொட்டிகளிலுள்ள பொது மக்கள் நன்கு அறியும்படி தீவிரப் பிரச்சாரம் செய்யவேண்டும் என்பது எனது கோரிக்கை. நம்முடைய கழக திட்டத்தில் திராவிட நாட்டைப் பிரித்து நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், தொழிலாளிகளுக்கு தொழில் இந்த நான்கு காரியங்களும் பூர்த்தி செய்தல் அவசியமாகும். இந்தக் காரியங்களைப் பூர்த்தி செய்துகொள்ள முதலில் நாம் வடநாட்டு மத்திய ஆட்சிப் பிடியிலிருந்து விடுபட வேண்டும். தனி நாடாகப் பிரியாமல் ஆட்சி மட்டும் நம் கைக்கு வந்தாலும் நாம் நம்முடைய திட்டங்களை நிறைவேற்றி பொதுமக்களுக்கு நன்மை செய்யமுடியாது.

* * *

வகுப்புகள் இருக்கும் வரை வகுப்புவாரி உரிமைகள் இருந்தே தீரவேண்டும். வகுப்புரிமைகள் ரத்து செய்துவிட்டதின் காரணமாக இந்த நாட்டில் சிறுபான்மையோரும் உண்மையான பிரதிநிதியைத்தேர்ந்தெடுக்க முடியாமல் செய்துவிட்டார்கள். இது கொடுமையிலும் கொடுமையாகும்.

* * *

காங்கிரஸ்காரர்கள் இராம ராஜ்யத்தைக்கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். நாம் அப்போதே அதை மறுத்தோம் ராமாயணக் கதையில் ராமனும் சீதையும் 14 வருட வனவாசம் என்ற காலத்தில் உண்ண உணவு இன்றி, உடுக்க

(6-ம் பக்கம் பார்க்க)

REGD No. M. 4642

தேர்தல் மழை பெய்கிறது! ஒப்பந்தக் குடை பிடிப்போம்!

5-ம் பக்கத் தொடர்ச்சி

வெறும் எல்லைக்கோடு! இருந்தாலும் இரண்டு நாடுகளாகத்தானே இருக்கின்றன

நார்வே, ஸ்வீடன் என்ற நாடுகள் இரண்டிற்கும் சேர்ந்து ஸ்காண்டிநேவியா என்று பெயர் கூட இருக்கிறது. இருந்தாலும் தனித்தனியாகத்தானிருக்கின்றன. இப்படிச் சின்னஞ்சிறு நாடுகள் எத்தனையோ உண்டு.

ஸ்விட்சர்லாந்து கடிகாரம், செக்கோஸ்லோவாக், பிரஞ்சு செண்ட், ஜெர்மன் மருந்து என்று ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு துறையிலே உயர்ந்து விளங்குகின்றன. அங்க செலவும நேரு, ஏன் ஐரோப்பா, ஐரோப்பியருக்கே என்று சொல்லக்கூடாது? இப்படிப் பிரிந்திருந்தால் ஐரோப்பிய தேசியம் உடைந்து விடுமே என்று சொல்லக்கூடாது?

இந்த நாடுகளில், எந்த நாட்டைவிட திராவிடநாடுசிறியது? அளந்து பார்க்கட்டும், பிறகு பேசட்டும்.

வடநாட்டு வரலாற்றைப் பாருங்கள். வந்தான், வந்தான் என்றே பார்க்கிறோம். சென்றான், 'வென்றான' என்ற செய்தியே இருக்காது தென்னாட்டிற்கு. ராமன் வந்தான், ஆனால் சீதையோடு! புலிகேசி முயன்றான். தோற்றான். கனிஷ்கன், ஹர்ஷன், அக்பர், ஔரங்கசீப் எவருமே, தென்னாட்டை வென்று நிலையாக ஆட்சி நடத்தியதில்லை. ஆண்டவன் எடுத்த பத்து அவதாரங்கள் கூட விந்தியத்திற்கு அப்பால்தான். பாவிகள் இருக்குமிடத்தில்தானே, ஆண்டவன் அவதாரம் எடுக்கவேண்டும்! ஆகவேதான் எவரும் வாளால் வெல்லாத திராவிடத்தை—சூழ்ச்சியால் வீழ்ச்சியடைந்த திராவிடத்தை மீண்டும் கேட்கிறோம். கடலரண், மலையரண், மக்கள் ஆற்றலரண் அத்தனையும் கொண்ட திராவிடத்தைக் கேட்கிறோம். இழந்த மூதாதையர் நாட்டைக் கேட்கிறோம்—எங்கள் இலட்சிய கீதமாம் இன்பத் திராவிடத்தைக் கேட்கிறோம். எந்த நாட்டில், வணிகர் யவனமும், கடாரமும் சென்று வணிகம் நடத்தினரோ, எந்த நாட்டில், காதலையும் வீரத்தையும் கவிதையாக்கி, காவியமாக்கி மகிழ்ந்த புலவர் பெருமக்கள் வாழ்ந்தனரோ அந்த நாட்டைக் கேட்கிறோம். இவ்வளவு நியாயம், நீதி—வாதங்கள் ஏன்? நாம் பிறந்த நாட்டை, நமக்கே சொந்தமான நாட்டை நாம், கேட்கிறோம். ஆம், பெற்றால் திராவிடத்தை பெறுவோம். பெறாவிட்டால், பெறுகிற முயற்சியிலேயே செத்து மடிவோம். அத்தகைய வீரவுணர்ச்சி கொள்ளுங்கள்!

நமது இலட்சியப் பாதையில் இடையில் வருகிறது தேர்தல்—மனதை மயக்கும் மாயக்கள்ளன் தேர்தல். நமது இலட்சியத்தைக் களவாடாமல் காக்கவேண்டும், இந்த நேரத்தில் — இது மிகமிக முக்கியம். இயற்கையிலே நான் கொஞ்சம் குள்ளன் — ஆகவே என்னை சுலபத்திலே ஏமாற்றிவிட முடியாது! இந்த நேரத்திலே எவர் வந்து, எப்படிப் பேசினாலும், தழுதழுத்த குரலில் பேசினாலும், அன்பு மொழி வீசினாலும், உச்சி மோந்தாலும், முத்தமிட்டாலும் ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்திடு என்பேன்.

தேர்தலில் நின்று, சட்டசபைக்கும் பார்லிமெண்டுக்கும் நாங்கள் தான் போகவேண்டியவர்கள் நியாயப்படி, உரிமைப்படி ஆனால், போகவில்லை, யூகம் காட்டிய முறைப்படி! நாங்கள் போகவேண்டிய இடத்திற்கு, நாங்கள் அனுப்புகிறவர்கள், நாங்கள் சொல்வதைக் கூடக் கேட்காதவர்களாக எப்படி இருக்க முடியும்? அத்தகையோர்களை எப்படி அனுப்புவோம்?

நமது ஒப்பந்தப் பத்திரத்தில் 150 பேர்களுக்கு மேல் கையொப்பமிட்டிருக்கிறார்கள். சாதாரண காலத்தில் நமது திராவிட நாடு பிரச்சினையை ஒப்பாவிட்டாலும், நெருக்கடியான நேரத்தில் எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள் என்பதை அந்தப் பட்டியல் காட்டுகிறது. ஆனால், இப்பொழுது கையெழுத்திட்டுவிட்டு பிறகு மாறிவிட்டால் என்ன செய்வது என்கிறார்கள். கையெழுத்திட்டுவிட்டு இறந்துவிட்டால் என்ன செய்வோம்? அதைப்போல எண்ணிக் கொள்கிறோம். ஜெயித்த பிறகு அவர்கள் நம்மை விட்டுவிட்டு வெளியேறுவார்களா? போகத்தான் நாம் விடுவோமா? நாம் கையாலாகாதவர்களா? என்னை ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் குழு உறுப்பினராக்க, சிபார்சு வேண்டியிருந்தது, அப்போது! ஆனால், இப்பொழுது, அந்த கனதனவான்கள் கண்டு மிரளும்படி நாம் வளர்ந்துவிட்டோம். எப்படி முடிந்தது? அத்தகைய சாதனை செய்த நம்மாலா, இவர்களை நம் பக்கமிருக்கச் செய்ய முடியாது!

ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத இடங்களில், கழகத்தின் அதிகார பூர்வமான ஆதரவு எவருக்கும் இருக்காது. அங்கு கழகத் தோழர்கள் வாக்காளர்களாகத் தானிருப்பார்கள். அங்கு காங்கிரசை எதிர்த்து நிற்போரில் முற்போக்கு எண்ணமுள்ள, நாணயமிக்க, நேர்மையாளருக்கு, கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும் தங்கள் வாக்குரிமையை வழங்குவார்கள்.

இந்த நேரத்தில், கம்யூனிஸ்ட் தோழர்கள் ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்திட முடியாமல் போனது குறித்து எனது வருத்தத்தைத் தெரிவிக்காமலிருக்க முடியாது. அவர்கள் கையெழுத்திடுவார்கள் என்று உறுதியாக எண்ணி, உள்ளன்போடு ஒத்துழைக்கத் தயாராக இருந்தேன். ஆனால் அவர்கள் தனிக் கட்சி, நம்மைப் போலவே. அவர்களுக்கு சிக்கல்கள் இருக்கலாம். அதனால கையொப்பமிட முடியாமல் போய்விட்டது. அதுபோலத்தான் எங்கள் கொள்கை என்னைத் தடுத்து நிற்கிறது. கம்யூனிஸ்டு தோழர்கள் நம்மதிப்புக்கும், அன்புக்கும் பாத்திரமானவர்கள், நல்லவர்கள்! ஆனால் அவர்கள் கையொப்பமிட முடியாமல் தடுப்பதற்கான சிக்கல்கள், ஒரு தனிக் கட்சிக்காரர் என்பதால் ஏற்பட்டதோ, அதுபோல நமக்கும் ஒப்பந்தம் கேட்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கையொப்பமிடக் கூடாது என்று அவர்கள் தீர்மானித்தது போலவே, கையெழுத்திட்டவரையே ஆதரிக்கவேண்டும் என்று தீர்மானிக்க நமக்கு உரிமை உண்டு.

திராவிடத்தில், தி. மு. க. தான் சரியான, உண்மையானகம்யூனிஸ்டு கட்சி என்று நான் கூறுகிறேன். வெளிநாட்டிலிருந்து, இதற்காக ஒரு குழு வந்து விசாரிக்குமானல், ஆதாரங்கள் ஆயிரமாயிரம் காட்டி நிரூபிப்பேன். இங்கே வரண்ட தலைகள், ஒட்டிய வயிறு, குழிவிழுந்த கண்கள் ஏராளம்—உழைத்து உருக்குலைந்த தோழர்கள் பலரே பணியாற்றுகின்றனர். தொழிலாளர்பலர் அங்கம் வகிக்கின்றனர்.

அவர்கள் பேசும் சமதர்ம திட்டம், கிராமபோன் பிளேட்போல. கிராமபோன் தயாராகாமல்,பிளேட் எப்படி பாடும்? நாம்தான் சமுதாய கிராமபோனைத் தயாரக்கி வருகிறோம். நம்மிடம் சமதர்ம பிளேட்டும். சமுதாய கிராமபோனும், அரசியல் ஊசியும் இருக்கிறது.

தோழர் ஜீவா, சு. ம. இயக்கம் பெற்றெடுத்த குழந்தை என்பதை அறிந்தேன், உணர்கிறேன். அவர் இந்த இடத்தில் இருக்கவேண்டியவர்! ஆனால் தேர்தல் நேரத்தில் வந்தால் ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்தைப்போடும்' என்றே கூறுவேன். அவர் இங்கு வரலாம், சமதர்மக் கொள்கைகளுக்கு எதிராக எது இருக்குமானலும் மாற்றலாம், என்னைக் கண்டிக்கும் உரிமையுள்ளவர். ஆம், இன்னும் ஐந்தாண்டு காலத்தில் உண்மையான கூட்டு முன்னணி உறுதியாக ஏற்படும் என்ற நம்பிக்கை பெற்றிருக்கிறேன் அதனை இந்த நேரத்தில் சமர்ப்பிக்கிறேன்.

திராவிடநாடு, ஒரு நாட்டிற்கு தேவையான எல்லைகளை பெற்றிருக்கிறது. பாகிஸ்தானே,தொடர்பான எல்லைகளைக்கூடப் பெறவில்லை. அந்த பாகிஸ்தானே வாங்க முடிந்துவிட்டதென்றால், நாம் ஏன் வாங்க முடியாது? திராவிடநாடு பெற்றுவிட்டால் வடநாட்டு மார்வாடிகளை விரட்டி விடுவீர்களா என்கிறார்கள். விரட்டமாட்டோம். அரசாங்க அனுமதியை அவர்கள் பெறவேண்டும். பெற்றால்தான் இங்கு தங்க முடியும். அவர்கள் அரசாங்க அனுமதி பெற்ற அயலார்கள், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர்போல இங்கே இருக்கலாம்.

திராவிடநாடு பிரிவினையை, மக்கள் முன்வைத்து 1954ல்பொதுமக்கள் வாக்கெடுப்பு (Referendum) நடத்துவோம். அதன்பிறகு, மக்கள்தீர்ப்பை, மத்திய சர்க்காரிடம் காட்டிக்கேட்போம். அவர்கள் பிடிவாதம் செய்தால், ஐ. நா. சபைக்குப் போவோம். மத்திய சர்க்கார் மறுப்பார்கள். எதிர்த்தால் சிறையில் தள்ளக்கூடும். அப்பொழுது நடைபெறும் தேர்தலில் நாம் கலந்துகொள்வோம். சட்டசபையில் அதனையே தீர்மானமாக்கிடுவோம், சட்டசபைகளிலும் அப்பொழுது போராடுவோம். வடநாட்டு சர்க்கார் நமது மந்திரி சபையை கலைப்பார்கள். அதே பிரச்சினையை வைத்து மீண்டும் தேர்தலில்போட்டியிடுவோம். மீண்டும் மீண்டும் நாம் ஜெயிப்போம். இத்தகைய முறையில் போராட்டம் நடைபெறும். மந்திரி சபையில்லாமல், மக்கள் என்ன செய்வார்கள் என்ற சந்தேகம் வேண்டாம். பிரிட்டிஷார் ஏற்படுத்தி வைத்துள்ள நிர்வாக இயந்திரம் மந்திரி இல்லாமலும் பணியாற்றும்.

1960ல், நிச்சயமாக ஒரு அரசியல் கொந்தளிப்பு இருக்கும். அப்பொழுது ஒருபோராட்டத்தில்நாம் குதிக்க வேண்டி வரும். வடநாட்டு சர்க்காருக்கு வரி கொடுக்க மாட்டோம், வடநாட்டு சர்க்கார் நடத்தும், ரயிலில் டிக்கட்டில்லாமல் தான் ஏறுவோம் என்றெல்லாம் போராட்டத்தின் திட்டங்கள் அமையலாம். ஆகவே, தோழர்களே அதற்கான முறையில் பணியாற்றுங்கள்!

தோழர்களே, இரண்டு லட்சம் உறுப்பினராவது இந்த ஆண்டு சேர்ந்தாக வேண்டும் ; நீங்கள் எனக்கு போட்ட மாலைகள் பெரிதல்ல — அமைத்திருக்கும் பெரிய பந்தல் அல்ல முக்கியம் — உறுப்பினர் எண்ணிக்கை பெருகவேண்டும். அந்த எண்ணிக்கை தான் என்னை உயர்த்தும் — உங்கள் பொதுச் செயலாளரை உயர்த்தும்! அதுவே உங்களை உயர்த்தும்.

தோழர்களே, ஆர்வத்தோடு உங்களைப் பார்க்கிறேன், ஆனால் அதே நேரத்தில் அச்சத்தோடு பார்க்கிறேன். வளர்ந்திருக்கும் ஆர்வத்தை, வகைப் படுத்த வேண்டும் இல்லாவிட்டால், நம்மையே அது கொன்று விடும். ஆர்வத்தை அளவில்லாமல் வளர்த்திருக்கிறோம் அதற்கேற்ற பணியாற்று[...] வழி அமைக்க வேண்டும். சர்க்கார் தடையுத்தரவுகள், உங்க[...] வீட்டு ஓடுகளாகக் கருதுங்க[...] அடக்கு முறைகள் எல்லாம், வி[...] யாட்டு கருவிகள்! வீட்டுக்கு[...] சிறைக்கும் வித்தியாசம் தெரிய[...] கூடாது! ஆம் அப்பொழுதுதா[...] இழந்த திராவிடத்தைப் பெ[...] முடியும்! அத்தகைய தியாகம் செய்யத் தயாராகுங்கள்! [...] துளிகளே, நாட்டின் [...] களே! அந்த காணிக்கையை என[...] குத் தாருங்கள். வணக்கம்.

வெற்றி வருகிறது!

சென்னையில் நடந்த மாநி[...] மாநாட்டுச் சிறப்புகளை விளக்கி[...] புத்தகம் தயாராகிக் கொண்டி[...] கிறது. 'வெற்றி' என்ற மாநாட்[...] சிறப்பு நூல் விரைவில் வெளிவ[...] மற்ற விவரம் பிறகு. ஆசிரியர்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்கான காரணம், இங்[...] லாம் தமது ஆதிக்கம் இருப்பதா[...] கூறிக்கொள்ள விரும்புகின்றன.

வரட்டு ஜம்பம்!—அவர்கள் [...] பத்தியத்தைஇங்கே, இன்னும்ல[...] க்கிறது.

இது சம்பந்தமாக, நமது மா[...] நிறைவேற்றி யிருக்கும் தீர்மா[...] இது.

13. ஆதிக்க வல்லரசுகள் [...] யேற்ற நாடுகளாகப் பலநாடு[...] ஆக்கிரமித்துக்கொண்டுஅங்[...] ல்லாம் அரும்பும் விடுதலைவேட்[...] யுணர்ச்சியை அடக்கிக்கொடு[...] கள் இழைத்து வருவதை [...] மையாகக்கண்டிப்பதோடு ஆ[...] மிப்பு வல்லரசுகள் அந்தந்த [...] களைவிட்டு உடன் வெளி[...] வேண்டும் என்றும் இம்மா[...] வற்புறுத்துகிறது.

(ஆ) குறிப்பாக இந்தி[...] துணைக்கண்டத்தைப் பொற[...] வரையில் குடியேற்ற நாடு[...] வைத்துக்கொண்டு ஆதி[...] செலுத்தும் வல்லரசுக[...] போர்த்துகீசு, பிரெஞ்சு [...] கள் அந்தந்தப் பகுதிகளை வி[...] அகலவேண்டும் என்றும் [...] மாநாடு வற்புறுத்துவதோ[...] அந்தந்தப் பகுதிகள் தம[...] எதிர்காலத்தை தாங்களே [...] யித்துக்கொள்ளும் உரிமை[...] வைக்கப்பட வேண்டும் என[...] இம்மாநாடு கருதுகிறது.

சி. என். ஏ.

சுற்றுப்பிரயாணம்

டிச. 26. கடலூர்
28. குடியேற்றம்
29. திருப்பத்தூர் N.
30. சென்னை (தலைமைநிலை[...]
31. காஞ்சிபுரம்
ஜன. 3. ,,
4. அரூர்
5. கிருஷ்ணகிரி

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram